## கர்த்தருடைய பரிசுத்தனாகிய

# ஆரோன்



திருமறை அறிஞர்
பாஸ்டர் A. கிறிஸ்டோபர்

கர்த்தருடைய பரிசுத்தனாகிய

# ஆரோன்


ஆசிரியர்
திருமறை அறிஞர்
Rev. டாக்டர். **அ. கிறிஸ்டோபர்**



வெளியிடுபவர்
**விண்ணக அப்பம்**
நேருவீதி, சூரம்பட்டி,
ஈரோடு – 9. தென் இந்தியா.



| | | |
|---|---|---|
| FIRST EDITION | - | JULY 2005 |
| TOTAL COPIES | - | 2000 |
| COPY RIGHT | - | TO AUTHOR |
| PRICE | - | Rs. 40.00 (IN INDIA) |
| BOOK NUMBER | - | T 49 |



**FOR DETAILS CONTACT**
**Rev. Dr. A. CHRISTOPHER**
**No. 4/2, NEHRU STREET, SOORAMPATTI,**
**ERODE - 638 009. S.INDIA.**
**PHONE : (0424) 2271323 (Off)**
**Cell : 98433 - 58824**
**Fax : (0424) 2277286**
**e-mail : winnagaappam@rediffmail.com**

## வாழ்த்துரை

திருமறைப் பெரியார்

**அப்போஸ்தலர். யோபு ஞானப்பிரகாசம்**,

நிறுவனர் இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ்,

கோயம்புத்தூர் – 12. தென் இந்தியா.

நம்முடைய இரட்சகரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

இப்புத்தகத்தின் ஆசிரியரும், எங்கள் உடன் ஊழியருமான திருமறை அறிஞர். மேய்ப்பர் அ. கிறிஸ்டோபர் அவர்களுக்காய் கர்த்தரை துதிக்கிறேன்.

நல்ல மூத்த போதகரும், சிறந்த பேச்சாளருமாகிய இவரது எழுத்து நடை மிகவும் வித்தியாசமானது. பக்கத்தில் நின்று கொண்டு பேசுவதைப் போலவே ஒரு சிறப்புணர்வு இப்புத்தகத்தை வாசிக்கும் பொழுது நமக்குத் தோன்றும். கிழக்கத்திய – மேற்கத்திய நாடுகளில் வாழுகின்ற தமிழ் கிறிஸ்துவர்களில் அநேகர் இவரது புத்தகத்தை வாஞ்சையாய் வாங்கி வாசிக்கிறார்கள் என்பதை நான் அறிவேன்.

தெளிவும், துணிவுமுள்ள இவரது எழுத்துக்களால் ஊழியர்களும், விசுவாசிகளும், வேதாகம மாணவர்களும் புத்துணர்வுகளையும், புதுவாழ்வையும் பெற்று வருகின்றனர்.

கர்த்தருடைய பரிசுத்தனாகிய ஆரோன் என்ற பெயரில் வெளிவந்துள்ள இந்நூலில் பரிசுத்தத்தை மையப்படுத்தி உள்ளுணர்வை தட்டியெழுப்பி உலகத்தில் நாம் சாட்சியாய் வாழ உன்னதமான கருத்துக்களை சுட்டிக் காட்டியுள்ளார்.

எங்கள் I.P.A. ஸ்தாபனத்தின், மாவட்டங்களின் கண்காணிப்பாளராகிய இவர் நல்ல சுகத்துடன் இருந்து இன்னும் பல புத்தகங்களை எழுத வாழ்த்துகிறேன் – ஜெபிக்கிறேன். நீங்களும் ஜெபியுங்கள் – உதவுங்கள் – இந்நூலை மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.

ஆமென்.



## என்னுரை

அன்பு வாசகர்களே! அன்பரின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த நல்ல நூலுக்காய் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். தொண்ணூறுகளில் சகோ. சாம் ஜெபத்துரை வெளியீடாக வந்த பயனுள்ள பிரசங்க குறிப்புகள் என்ற, நான் எழுதிய புத்தகத்தில் என் பரிசுத்தனாகிய ஆரோன் என்ற தலைப்பில் நான் கொடுத்திருந்த பிரசங்க குறிப்புகளை நானே பல இடங்களில் பேசி வந்தேன். எண்ணற்ற ஊழியரும், விசுவாசிகளும் அச்செய்திவேளையில் உடைக்கப்பட்டனர்– உருவாக்கப்பட்டனர் – உருமாற்றப்பட்டனர்.

என் வாசகர்கள் யாவரும் பயன்பெற வேண்டுமென்ற வாஞ்சையில் இந்த நூலை ஜெபத்துடன் வெளியிட்டிருக்கிறேன்.

ஆரோன் ஒரு அற்புதமான மனிதர். இயேசு கிறிஸ்துவுக்கும், ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும் முன் அடையாளமாகவுள்ள அவரது வாழ்வில் எண்ணற்ற பாடங்கள் நமக்குண்டு.

கொஞ்சத்தை இதில் எழுதியுள்ளேன். எஞ்சியதை ஆவியானவரே உங்களுக்கு வெளிப்படுத்துவார். ஜெபத்தோடு மட்டுமல்ல தாகத்தோடும் வாசியுங்கள். புதிய திருப்தியும் – புதிய திருப்பமும் உங்கள் வாழ்வில் ஏற்படுவது திண்ணம்.

இதனை தொடர்ந்து இதே மாதத்தில் வெளிவரும் எனது ஐம்பதாவது வெளியீடாகிய பிரியமுள்ள பிலேமோனை வாங்கி வாசியுங்கள்.

அன்போடும் ஜெபத்தோடும்

**அ.கிறிஸ்டோபர்.**

## இயேசுவே படைக்கிறேன்

ஆரோனைப் போல்என்னை அழைத்தாய் !
ஆசாரிய ஊழியத்தில்நிற்க வைத்தாய் !
ஆவியின் வரங்களைஎன்னில் பொழிந்தாய்
ஆலோசனை சொல்லிஎழுத வைத்தாய்.

இனிய நண்பர்கள்பலர் கொடுத்தாய்!
இலக்கிய ஊழியத்தைதாங்க வைத்தாய் !
இதயத்தில் உள்ளுணர்வுநீ கொடுத்தாய்
இதுவரை துணிவுதந்துஎழுத வைத்தாய்.

உம்வார்த்தை எங்கெங்கும் பரவிடவே !
உம்ஜனம் சத்தியத்தை அறிந்திடவே!
உம்கிருபை இந்நூலில் பெருகிடவே!
உம்பாதம் இஃதினை படைக்கிறேன்.

அன்போடு
அ. கிறிஸ்டோபர்.



## பொருளடக்கம்

அதிகாரம்

1. ஆரோன் – ஓர் அறிமுகம்
2. பரிசுத்தனாகிய ஆரோன்
3. ஆசாரியனாகிய ஆரான்
4. சகோதரனாகிய ஆரோன்
5. அழைக்கப்பட்டவனாகிய ஆரோன்
6. பெலவீனனாகிய ஆரோன்

# 1

# ஆரோன் - ஓர் அறிமுகம்

ஆஹா என்ன விசேஷமான குடும்பம் ! எவ்வளவு வித்தியாசமான குடும்பம்! நினைத்துப் பார்க்கவே விந்தையாயிருக்கிறது. முதற்பிள்ளை தீர்க்கதரிசி, இரண்டாம் பிள்ளை ஆசாரியன், மூன்றாம் பிள்ளை விடுதலை ஊழியர். மூன்று பிள்ளைகளுமே முத்துக்கள். இந்தவொரு குடும்பத்தை தவிர இப்படிப்பட்ட குடும்பத்தை வேதத்தில் எங்கேயுமே காண முடியாது.

இப்படி பிறக்கிற எல்லா குழந்தைகளுமே கர்த்தரின் ஊழியத்தில் தங்களை இணைத்துக் கொண்டால் அந்தக் குடும்பம் எவ்வளவு பாக்கியமுள்ளதாய் இருக்கும். நினைத்துப் பார்க்கையில் நெஞ்சம் இனிக்கிறது. இப்படிப்பட்ட குடும்பம் இன்று அமைவதற்கு சாத்தியமா? என்ற கேள்வி உங்களுக்கு எழுந்தால், 'சத்திய வேதம் சொல்லுகிறபடி நடப்பவருக்கு இது சாத்தியமே' என்பது தான் என் பதில்.

லேவி கோத்திரத்தில் பிறந்தவனாகிய அம்ராம் என்பவன் லேவி கோத்திரத்தில் பிறந்த ஒருவனின் குமாரத்தியாகிய யோகபெத் என்பவரை விவாகம் பண்ணினார். அவர்களுக்கு மிரியாம், ஆரோன், மோசே என்ற முத்தான மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். இம்மூவருமே தீர்க்கதரிசினியாக, ஆசாரியனாக, இரட்சகனாக நின்று இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுதலையாக்கிக் கொண்டு வந்தார்கள்.



பிரியமானவர்களே, இங்கே ஒன்றை யோசித்துப் பார்க்க வேண்டும். அம்ராம் தனது திருமண காரியத்தில் சரியான வெளிப்பாட்டை உடையவராக இருந்தார். தேவனுடைய உள்ளுணர்வு அவருக்குள் இருந்தது. லேவி கோத்திரத்தானாகிய அவர், லேவி கோத்திரத்தாளை விவாகம் பண்ணினதை பிரியமுள்ளதாக தேவன் கண்டபடியால்தான் இஸ்ரவேலின் இரட்சகனாகிய மோசேயை பிறக்க செய்வதற்கு தேவன் அவர்களை தெரிந்து கொண்டார். அதுமட்டுமல்ல முதல் பிரதான ஆசாரியனாக ஆரோனையும் தேவன் தெரிந்து கொண்டார்.

திருமணம் செய்து வைப்பவர்களுக்கும், செய்து கொள்ளவிரும்புபவருக்கும் ஒரு ஆலோசனை கொடுக்க விரும்புகிறேன். இரட்சிப்பையும் ஆவிக்குரிய அனுபவங்களையும் பெற்ற கர்த்தருடைய பிள்ளைகள் அதே நிலையிலுள்ள மற்றவரையே வாழ்க்கை துணையாக தெரிந்து கொள்ள வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் சொந்தம், ஜாதி, பணம் என்ற வலையில் சிக்கி இரட்சிக்கப்படாத நபரோடு இல்லற இணைப்பில் இணைந்து விடாதீர்கள். அப்படி செய்தால் உங்கள் குடும்பம் குதுகலமாக இருப்பதற்கு பதிலாக குழப்பமாக இருக்கும். குழந்தைகளோ குதர்க்கவாதிகளாக இருக்கும்.

மல்கியா புத்தகத்தில் சொல்லப்பட்டபடி மல்கியா.2 : 11 திருமணம் என்பது கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம். எனவே பரிசுத்த மெய் விவாகத்தில், பரிசுத்த நியமத்தின்படி நீங்கள் இணைக்கப்படுவீர்கள் என்றால்

மல்கியாவில் சொல்லப்பட்டபடி (மல்கியா. 2 : 15) பரிசுத்தமுள்ள சந்ததியை பெறுவீர்கள். அவர்கள் மிரியாம், ஆரோன், மோசே என்பவர்களைப் போல ஆண்டவரின் சேவையில் ஆயிரமாயிரம் பேர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பார்கள்.

ஆரோன்! ஒரு அற்புதமான மனிதர் அவருடைய வாழ்க்கை ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும், குடும்பத்தலைவர்களுக்கும் மிகப்பெரிய முன்மாதிரி. வேதத்தில் இருக்கிற பெயர்களுக்கான ஆங்கில அகராதியில் முதல் பெயராக வருவது யாருடைய பெயர் தெரியுமா? முதல் மனிதனாகிய ஆதாம் பெயருமல்ல, முதலில் மரித்த ஆபேல் பெயருமல்ல மாறாக, ஆரோன் என்ற பெயரே. அகராதியில் மாத்திரம் முதற்பெயரென்று எண்ணிவிடாதீர்கள். அநேக காரியங்களில் இவர் முதலிடத்தை பிடித்திருக்கிறார்.

யாக்கோபின் குமாரனாகிய லேவி வம்சத்தில் எத்தனையோ ஆண்மக்கள் உண்டு. ஆனால் 'லேவியன்' என்று முதன் முதலில் தேவனால் அடையாளம் காட்டப்பட்டவன் இந்த ஆரோனே. யாத் 4 : 14 வசனத்தில் லேவியனாகிய ஆரோன் என்று தேவன் சொல்வதை கவனியுங்கள்.

மகிமையான கூடாரத்தை மோசே உருவாக்கின போது அதில் முதல் பிரதான ஆசாரியனாயிருக்கும்படி தேவனால் கட்டளையிடப்பட்டு, மோசேயினால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் இந்த ஆரோனே இன்னும் பல காரியங்கள் உண்டு. பின்வரும் அதிகாரங்களில் அவைகளை விளக்குகிறேன்.



யாத்திராகமத்தில் அறிமுகமாகிற ஆரோனுடைய பெயர் பழைய ஏற்பாட்டில் ஏறக்குறைய எல்லா புத்தகங்களிலும் குறிப்பிடப்பட்டிருப்பதுமின்றி புதிய ஏற்பாட்டில் எபிரெய நிருபம் வரை குறிப்பிடப்பட்டிருப்பது மிகச்சிறந்த அம்சமாகும்.

இந்த புத்தகத்தின் தலைப்பாகிய கர்த்தருடைய பரிசுத்தனாகிய ஆரோன் என்பது நான் கண்டுபிடித்த சொற்றொடர் அல்ல. சங்கீதம் 106 : 16ல் கர்த்தரே இப்படிப்பட்ட சாட்சியை கொடுத்திருக்கிறார் என்பது நீங்கள் அறிய வேண்டிய முக்கியமான காரியம். இதிலிருந்தே தேவனுடைய பார்வையில் எவ்வளவு விசேஷமானவராக இருந்தாரென்பது நமக்கு புலனாகிறது அல்லவா?

பழைய ஏற்பாட்டில் உள்ள பரிசுத்தவான்கள், பொருட்கள் மற்றும் சில சம்பவங்கள் கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறவைகளாகவும், முன் அடையாளங் களாகவும் இருப்பது போலவே இந்த ஆரோனும் கிறிஸ்துவுக்கும், ஊழியர்களுக்கும் முன் அடையாளமாகவும் முன் மாதிரியாகவுமிருக்கிறார்.

பிரதான ஆசாரியனாகிய இந்த ஆரோனைப் போலவே நம்முடைய இயேசுவும் பிரதான ஆசாரியனாயிருக்கிறார். எபிரெயர் நிருபத்தில் நாம் அறிக்கை பண்ணுகிற பிரதான ஆசாரியர் என்று கூறப்பட்டுள்ளது அல்லவா?

ஆரோன் ஆண்டிற்கு ஒருமுறை மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து முழு இஸ்ரவேலருக்காக பாவ நிவர்த்தி செய்வது போலவே நமது இயேசுவும்

பிதாவின் சமுகத்தில் நமக்காக பிரவேசித்து தம்முடைய சொந்த இரத்தத்தின் மூலம் பாவ நிவிர்த்தியை உண்டாக்கினார் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுதல் அவசியம்.

ஆரோனின் மரணம் கூட கிறிஸ்துவின் மரணத்துக்கு நிழலாகத்தான் இருக்கிறது. ஆரோன் மலையில் தேவ திட்டத்தின்படியே மரித்தார். அதைப்போலவே கிறிஸ்துவும் கல்வாரி மலையில் பிதாவின் தீர்மானத்தின்படியே மரித்தார்.

மனதுருகுவதிலும், மக்களின் மன்னிப்பிற்காக மன்றாடுவதிலும் கிறிஸ்துவை மிகச்சிறப்பாக வெளிப்படுத்துகிறார்.

சக ஊழியருடன் ஒத்துப்போவது எப்படி? தீர்மானங்களை வழுவாதபடி நிறைவேற்றுவது எப்படி? பல்வேறு நினைவுள்ள மக்களை நடத்தி செல்வது எப்படி? தேவ ஜனமாகிய இஸ்ரவேலின் மந்தையின் ஆடுகளை நெஞ்சிலும், தோளிலும் சுமந்து கொண்டு தேவ சமுகத்திற்குள் எப்படி நிற்பது? என்பவற்றில் ஒவ்வொரு ஊழியருக்கும் தேவையான உன்னதமான வாழ்வியல் பாடங்களைஅவர் வாழ்க்கையில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

அக்கா, தம்பி, குடும்பம், மக்கள், சபையார் இவைகள் மத்தியில் எப்படியொரு விசுவாசி நடைமுறை கிறிஸ்தவனாக இருக்க முடியுமென்பதற்கு இவரது வாழ்க்கை நல்ல பாடபுத்தகம் ஆகும்.

எண்பத்துமூன்று வயதுடையவராய் அறிமுகப் படுத்தப்படுகிற இந்த ஆரோன், நூற்றி இருபத்து மூன்று வயதுடையவராய் மரித்ததாக வேதத்தில் குறிக்கப்பட்டுள்ளது. அதாவது நாற்பது ஆண்டுகள்



தேவனோடும், தேவ ஜனத்தோடும் நடந்த இந்த ஆரோன் விட்டுச் சென்ற அனுபவங்கள் மிகச்சிறந்த வாழ்வியல் பாடங்கள்.

ஆரோன் என்றால் பிரகாசம் (Bright) என்று பொருள். ஜீவ வசனத்தை பிடித்துக்கொண்டு உலகிலே சுடர்களைப் போல பிரகாசிக்க விரும்புகிறவர்களும் (பிலிப்பியர் 2 : 14) எரிந்து பிரகாசிக்கிற விளக்கைப் போலிருக்க விரும்புகிறவர்களும், நீங்கள் இந்த உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் என்ற நம்முடைய அருள்நாதரின் வாக்கின்படி வாழ விரும்புகிறவர்களும் பிரகாசமெனும் பொருள்பட வாழ்ந்த ஆரோனின் வாழ்க்கைப் பாடத்தை வாசித்தே ஆகவேண்டும்.

திருமறையில் பல்வேறு இடங்களில் ஆரோனைக் குறித்து எண்ணற்ற காரியங்கள் எழுதப்பட்டுள்ளது. அவைகளில் ஒரு சில காரியத்தை இந்த புத்தகத்தில் விவரிக்க இருக்கிறேன். எனினும் ஆரோனைக் குறித்து உங்கள் அகத்தில் அகன்ற அறிவு உண்டாக வேண்டுமென்பதற்காக பிரகாசிக்கும் ஆரோனின் பல்வேறு பக்கங்களை பட்டியலிட்டு காண்பிக்க விரும்புகிறேன். இவைகள் எனது தயாரிப்பல்ல. வேதத்தில் பரிசுத்த ஆவியானவரால் சொல்லப்பட்ட வார்த்தைகள்.

1. லேவியனாகிய ஆரோன் (யாத். 4 : 14)
2. சகோதரனாகிய ஆரோன் (யாத். 28 : 1)
3. நன்றாய் பேசுகிற ஆரோன் (யாத். 4 : 14)
4. சகோதரரை கண்டு மகிழ்கிற ஆரோன் (யாத். 4 : 14)
5. தீர்க்கதரிசியாகிய ஆரோன் (யாத். 7 : 1)

6. வாயாகிய ஆரோன் (யாத். 4 : 16)
7. ஆசாரியனாகிய ஆரோன்
8. அற்புதம் செய்யும் ஆரோன்
9. போதகனாகிய ஆரோன் (லேவி 10 : 11)
10. தாங்கும் ஆரோன் (யாத். 17 : 10 – 12)
11. திறப்பில் நிற்கும் ஆரோன் (எண். 16 : 48)
12. சகிக்கும் ஆரோன்
13. அழைக்கப்பட்ட ஆரோன் (யாத். 6 : 13)
14. அபிஷேகம் பண்ணப்பட்ட ஆரோன் (யாத். 30 : 30)
15. தாழ்மையுள்ள ஆரோன்
16. முன்மாதிரியான ஆரோன்
17. வேறுபிரிக்கப்பட்ட ஆரோன் (யாத். 28 : 1)
18. அங்கீகரிக்கப்பட்ட ஆரோன் (எண். 17 : 8,9)
19. தெரிந்து கொள்ளப்பட்ட ஆரோன் (சங். 105 : 26)

இப்படி தேவ ஆவியானவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ள இந்த ஆரோன் கர்த்தரின் பரிசுத்தனாகிய ஆரோன் என்று சங்கீதத்தில் அழைக்கப்பட்டுள்ளார்.

நான் மேலே கொடுத்துள்ள பட்டியலிலுள்ள அத்துணையும் வசன ஆதாரமுள்ளவைகள். அவைகளில் சிலவற்றை நீங்கள் ஏற்கனவே அறிந்திருப்பீர்கள் என்றும், சிந்தித்திருப்பீர்கள் என்றும் எனக்குத் தெரியும். ஆனால் பல அம்சங்கள் புதியதாகவும் – புரியாததாகவும் உங்களுக்கு இருக்குமென்பதையும் அறிவேன். எனவே சரியான தெளிவு உங்களுக்கு உண்டாகும் பொருட்டு அத்தியாவசியமானவைகளை மட்டும் அடுத்து வரும் பக்கங்களில் – அதிகாரங்களில் சுருக்கமாக விளக்க விரும்புகிறேன்.



# 2

# பரிசுத்தனாகிய ஆரோன்

'ஆரோன்'என்று சொன்னவுடனே ஒவ்வொரு வருக்கும், ஒவ்வொருவிதமான தோற்றம் மனதில் தோன்றும். அவர் ஆசாரியனாக இருந்தாரென்பதைவிட வனாந்திரத்தில் பொன் கன்று குட்டியை உருவாக்கி விக்கிரக ஆராதனைக்கு வித்திட்டார் என்பதே பலருக்கு உள்ளத்தில் உருவாகும் தோற்றம்.

வேறு சிலருக்கோ! கன்மலையைப் பார்த்து பேசு என்று கர்த்தர் சொன்னபொழுது அதற்கு கீழ்படியாமல் மேரிபாவில் மோசேயுடன் சேர்ந்து கொண்டு கன்மலையை அடித்ததினால் கானானை இழந்தவன் என்ற தோற்றம் மனதில் வரும்.

இன்னும் சிலருக்கோ! மிரியாமுடன் சேர்ந்து கொண்டு மோசேக்கு விரோதமாக பேசி கர்த்தருடைய கடிந்து கொள்ளுதலை அடைந்தவனென்ற தோற்றம் மனத்திரையில் உண்டாகும்.

இப்படி ஒரு சராசரி மனிதனைப் போல குறைவுகளும், பெலவீனங்களுமுள்ள இந்த ஆரோனைக் குறித்து கர்த்தர் என்ன சொல்லுகிறார் என்பதை வேதத்தில் நாம் அவசியம் ஆராய்ந்து பார்த்திடல் வேண்டும்.

தேவன் மோசேயைக் குறித்து சொல்லும்போது உண்மையுள்ளவனென்றும், சாந்தமுள்ளவனென்றும் சாட்சி கொடுத்தார். தாவீதைக் குறித்து சொல்லும்போது

என் இருதயத்துக்கு ஏற்றவனென்று சாட்சி கொடுத்தார். யோபுவைக் குறித்து சாத்தானிடத்தில் பேசும்போது உத்தமனென்று சாட்சி கொடுத்தார்.

இப்படி பல்வேறு விதமான சாட்சிகளை பலரைக் குறித்து சொன்னாலும் பரிசுத்தவான் என்கிற சாட்சியை ஆரோனைத் தவிர தேவன் வேறு யாருக்கும் தரவில்லை என்பதுதான் கவனிக்க வேண்டிய சிறப்பம்சம். பரிசுத்தமானவன் – பரிசுத்தமாக்கப்பட்டவன் என்று பலரைக் குறித்து வேத வசனங்களை உங்களால் கோடிட்டு காட்ட முடியும் என்று எனக்கு தெரியும். ஆனால் கர்த்தருடைய பரிசுத்தன் என்று ஆரோனைத்தவிர வேறுயாரும் சாட்சி பெறவில்லை என்பது ஆணித்தரமான உண்மை.

பிரியமானவர்களே! நம்மிடத்தில் சில பெலவீனங்கள் இருக்கலாம். விழுகையும், தோல்வியும் கூட ஏற்பட்டிருக்கலாம். அவைகளிலே சிக்கி சீர்கெட்டு போய்விடக்கூடாது. மாறாக தப்பி சீர்பொருந்தி பரிசுத்தவானாக மாற வேண்டியது அவசியம்.

மனிதர்கள் நம்மைக்குறித்து என்னசாட்சி கொடுக்கிறார்கள்? என்பது முக்கியமல்ல. கர்த்தர் நம்மைக்குறித்து என்ன சாட்சி கொடுக்கிறார் என்பதுதான் முக்கியம். நீங்கள் தயாளனாக – ஊழியனாக இந்த உலகத்தில் வாழலாம். ஆனால் பரிசுத்தனாக நீங்கள் வாழாவிட்டால் முந்தின அனுபவங்கள் எல்லாம் பாழ் என்பதை நினைவில் வையுங்கள்.



நம்முடைய ஆண்டவர், **'நான் பரிசுத்தர்'** என்று சொன்னதையும், 'நான் பரிசுத்தராய் இருக்கிறது போல நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்' என்று சொன்னதையும் நினைவில் வையுங்கள். பரிசுத்தமில்லாமல் தேவனை ஒருவனும் தரிசிப்பதில்லையே!

எனவே பிரியமானவர்களே! தேவன் உங்களை பார்க்கும் பொழுது என் பரிசுத்தனாகிய இன்னான் என்று உங்களைக் குறித்து சொல்லுமளவிற்கு உங்கள் வாழ்வில் பரிசுத்தம் வேரூன்றி நிற்க வேண்டும்.

பரிசுத்தமாய் வாழ்வதற்காக சந்நியாசிக் கோலம் பூண்டுவிட வேண்டுமென்று அர்த்தமல்ல. இல்லற வாழ்விற்கும் தேவன் விரும்புகிற பரிசுத்தத்திற்கும் இடையே எந்த முரண்பாடும் கிடையாது.

மனிதன் பரிசுத்த நிலையிலிருக்கும் பொழுதே ஆதாம், ஏவாளை கணவன், மனைவியாக கர்த்தர் அங்கீகரித்தார். எனவே திருமண வாழ்வு பரிசுத்தத்திற்கு கேடு விளைவிக்காது.

இதே ஆதியாகமத்தில் ஏனோக்கு குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றுக்கொண்டு தேவனோடு சஞ்சரித்தார் என்றும் அந்த சூழ்நிலையிலேயே எடுத்துக் கொள்ளப்பட்டார் என்றும் வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. எனவே குடும்ப வாழ்விற்கும் – பரிசுத்த வாழ்விற்கும் இடையே எந்த முரண்பாடும் கிடையாது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

அப்படியே இஸ்ரவேல் புத்திரரின் விடுதலைக்கு காரணமாயிருந்த மோசேயும், ஆரோனும் திருமணமானவர்களே. ஆரோன் தேவனுடைய

அழைப்பைப் பெற்று பார்வோன் முன்பாக நிற்கும் போது எண்பத்து மூன்று வயதுடையவராக இருந்தார். ஆரோனை அறிமுகம் செய்யும் பொழுதே அவரது குடும்ப விபரங்களையும் தேவன் பதிவு செய்து தந்திருக்கிறார்.

இவர் அம்ராம், யோகெபேத் என்பவர்களின் குமாரன். யாத். 6 : 20 மோசே, மிரியாம் ஆகியோர் இவரோடு உடன்பிறந்தவர்கள். (யாத்.7:1, யாத். 15 : 20)

இவருடைய மனைவியின் பெயர் எலிசபாள். (யாத். 6 : 23). இவர்களுக்கு நாதாப், அபியூ, எலெயாசர், இத்தாமார் என்ற நான்கு குமாரர்கள் இருந்தார்கள் (யாத். 6 : 23). பின்னாளில் ஆரோனுக்குப் பிறகு எலெயாசர் பிரதான ஆசாரியனாகி யோசுவாவுடன் இணைந்து இஸ்ரவேல் மக்களை கானானுக்குள் நடத்தினான்.

இப்படி அக்கா, தம்பி, மனைவி, பிள்ளைகள் என்ற குடும்ப வளையத்திற்குள் மாத்திரமல்ல, மாறுபட்ட குணங்கள் படைத்திருந்த இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்கள் அடங்கிய மகாசபையாகிய பெரும் வளைத்திற்குள் செய்த ஊழியத்தின் மத்தியிலேயும் கர்த்தருடைய பரிசுத்தனென்று அவர் சாட்சி பெற்றது எவ்வளவு பெரிய உன்னதமான நிலையென்று எண்ணிப்பாருங்கள்.

பெலவீனமான ஆரோன் தன் வாழ்வில் தேவன் நியமித்த பரிசுத்த நியமங்களில் விசேஷித்த அக்கறை காட்டியதே அவர் பரிசுத்தன் என்ற சாட்சி பெறுவதற்கு முக்கிய அடிப்படை ஆகும்.



தேவன் அவரை ஆசாரியனாக தெரிந்து கொண்டபோது பரிசுத்த ஸ்தலத்திற்கும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் போய் தனக்கு பணிவிடை செய்ய பரிசுத்தமான ஒழுங்கு முறைகளை மோசேயின் மூலம் தேவன் கொடுத்தார்.

1. ஆரோனுக்கு பரிசுத்த வஸ்திரங்களை உண்டு பண்ணு.
2. பரிசுத்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணு.
3. கர்த்தருக்கு பரிசுத்தம் எனும் பட்டத்தை நெற்றியில் கட்டுவாயாக.
4. பிரேதத்தினால் தன்னை தீட்டுப்படுத்தாமல் தன்னை பரிசுத்தவானாக காத்துக்கொள்வானாக.

இப்படி பல நியமங்களை தேவன் கொடுத்த பொழுது அந்தப் பிரமாணங்களில் அவர் உண்மையுள்ளவராகவும், உறுதியுள்ளவராகவும் நின்றபடியால் தேவன் அவரை **'பரிசுத்தன்'** என்று அழைத்தார்.

பிரியமானவர்களே! பழைய ஏற்பாட்டில் லேவி புத்திரரில் ஆரோன் குடும்பத்தாரை மாத்திரம் இந்த ஆசாரிய ஊழியத்திற்கு தேவன் அழைத்தார். ஆனால் புதிய ஏற்பாட்டிலோ அவரது இரத்தத்தினால் கழுவப்பட்ட ஒவ்வொருவரையும் இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் மாற்றியிருக்கிறார்.

என் அன்பு வாசகர்களே நீங்கள் ராஜரீக ஆசாரியர்கள் என்பதை நினைவில் வையுங்கள். அதிசீக்கிரத்தில் மகா பரிசுத்த ஸ்தலமாகிய பரலோகத்திற்குள் நாம் பிரவேசிக்கப் போகிறோம். எனவே ஆசாரியராகிய நீங்கள் பரிசுத்த வஸ்திரத்தை

அணிந்து கொண்டு பாகையை சூடிக்கொண்டு, பட்டத்தைக் கட்டிக் கொண்டு பரிசுத்தமாய் நிற்க வேண்டியது அவசியம்.

உங்கள் இரட்சிப்பின் வஸ்திரம் எப்படியிருக்கிறது என்பதை சற்றே யோசித்துப் பாருங்கள், வஸ்திரத்தை உடுத்தியிருப்பது அல்ல. அது எந்த நிலையில் இருக்கிறது என்பதுதான் முக்கியம்.

சகரியா தீர்க்கதரிசி இருந்த காலத்தில் யோசுவா என்கிற பிரதான ஆசாரியன் இருந்தான் அவர் வஸ்திரம் தரித்திருந்தார். அந்த வஸ்திரம் எப்படியிருந்தது தெரியுமா?

'யோசுவாவோ என்றால் அழுக்கு வஸ்திரம் தரித்திருந்தான்' என்று சகரியா 3 : 3ல் கூறப்பட்டுள்ளது.

ஆசாரியனின் பரிசுத்தவஸ்திரம் அழுக்காயிருக் கலாகாது. அழுக்காய் இருப்பவர்கள் தீட்டுப்பட்டவர்கள். அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கோ, மகா பரிசுத்த ஸ்தலத்திற்கோ பிரவேசிப்பதற்கு தகுதியற்றவர்கள்.

அழுக்கு வஸ்திரம் போகட்டும், சிலர் நிர்வாணிகளாக கூட இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்–களைப் பார்த்துதான் வெளிப்படுத்தல் 3 : 18 ஆம் வசனத்தில் உன் நிர்வாணம் காணக் கூடாதபடி வஸ்திரத்தை கேட்டு வாங்கிக் கொள் என்று உயிர்த்தெழுந்த இயேசு அறைகூவல் விடுக்கிறார்.

பிரியமான தெய்வபிள்ளையே பரிசுத்த வஸ்திரத்தை மாத்திரமல்ல, பரிசுத்தத்தையே வஸ்திரமாக நீங்கள் உடுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.

இன்றைய நிலை என்ன? எங்கு பார்த்தாலும் பரிசுத்தக் கேடு. பரிசுத்த ஆவியைப் பெற்ற



ஊழியர்களும், விசுவாசிகளும் தடுமாறுகிறார்கள் – தடம் மாறுகிறார்கள். நீங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

ஆரோனுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை எண்ணிப் பார்க்கும் பொழுது என் கண்கள் குளமாகிவிடும். என் கற்பனை கண்களில் ஆரோனின் முகம் பளிச், பளிச்சென்று வந்துபோகும். லேவியராகமம் 10ம் அதிகாரத்தில் 1 முதல் 7 வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ள சம்பவத்தில் சில பகுதிகளை இங்கு குறிப்பிடுகிறேன் கவனித்துப் பாருங்கள்.

'நாதாபும், அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள். அப்பொழுது மோசே ஆரோனை நோக்கி என்னிடத்தில் சேருகிறவர்களால் நான் பரிசுத்தம் பண்ணப்பட்டு சகல ஜனங்களுக்கும் முன்பாக நான் மகிமைப்படுவேன் என்று கர்த்தர் சொன்னது இதுதான் என்றான்; **'ஆரோன் பேசாதிருந்தான்'**

எவ்வளவு வேதனை நிறைந்த சூழ்நிலை பாருங்கள்? தன் மகன்களில் மூத்தவனும், அடுத்தவனும் மரித்து விழுந்திருப்பதை கண்ணால் கண்ட ஆரோன் அந்த பிரேதங்கள் அண்டையில் செல்லவுமில்லை, அவர்களை அடக்கம் செய்யவுமில்லை. ஆரோனின் சிறிய தகப்பனின் குமாரர்களே அவர்களை அடக்கம் செய்தார்கள்.

இங்கே இரண்டு காரியத்தை நீங்கள் கவனிக்க வேண்டும். ஆரோன் தன் மகன்களின் நிமித்தம் தன்னை தீட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. இந்த மனதை உலுக்கும் சம்பவத்தினிமித்தம் தேவனையோ,

மோசேயையோ நிந்தித்து எந்த வார்த்தையும் ஆரோன் பேசவில்லை. இதுதான் அவரை பரிசுத்தன் என்ற அந்தஸ்த்திற்கு உயர்த்தியது.

அநேகர் பந்தம் – பாசம், சொந்தம் – கடமை என்று சொல்லிக்கொண்டு தேவன் சொன்ன நியமங்களை தள்ளிவைத்துவிட்டு தங்களை தீட்டுப்படுத்திக் கொள்கிறார்கள். அநேகர் தங்கள் பிள்ளைகளினிமித்தம் தீட்டுப்பட்டு பரிசுத்தத்தை இழந்து விடுகிறார்கள்.

தன் சொந்தக் கண் முன் மரித்து விழுந்த பிள்ளைகளை பார்க்கவும் செய்யாமல் தன் பரிசுத்தத்தை காத்துக்கொண்ட ஆரோன் எங்கே! தன் பிள்ளைகளின் ஒழுங்கற்ற செயல்களினிமித்தம் தங்கள் பிரதிஷ்டை களையும், பரிசுத்தத்தையும் உடைத்துப்போடுகிற பெற்றோர் எங்கே?

இந்த இக்கட்டான சூழ்நிலையில் மோசே சொன்ன வார்த்தைகள், இரக்கமற்ற வார்த்தைகளாய் மாத்திரமல்ல, இருதயத்தை பிளக்கின்ற வார்த்தைகளாய் இருந்தது. இந்த நிலையில் பதறியோ – கதறியோ எந்தவொரு வார்த்தையும் ஆரோன் பேசாமல் இருந்தது எத்தனை ஆச்சரியம்!

தேவப்பிள்ளையே, தேவனுடைய நடத்துதலைக் குறித்து நீ முறுமுறுப்பாயானால், தேவ வார்த்தைகளை வெளிப்படுத்துகிற தெய்வதாசர்களை குற்றப்படுத்தி பேசுவீர்களானால், உங்கள் பரிசுத்தத்தை தானாக இழந்து விடுவீர்கள் என்பதை நினைவில் வையுங்கள்.



இதைப்போலவே கோராகின் புத்திரர் ஆரோனுக்கு விரோதமாக எழும்பி முறுமுறுத்தார்கள். அதாவது லேவி கோத்திரத்தைச் சார்ந்தவர்களே லேவியனாகிய ஆரோனுக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடையை செய்வதற்கு முழுலேவி கோத்திரத்திற்கும் சிலாக்கியம் கொடுத்திருந்தார். அதே நேரத்தில் ஆசாரிய ஊழியத்தை செய்வதற்கு ஆரோனின் குடும்பத்தாருக்கு மாத்திரம் அங்கீகாரத்தை தேவன் வழங்கியிருந்தார். அதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

‘அட! நம்ம ஆரோன் தானே, அவனுக்கு கொடுக்கப்பட்ட ஊழியத்தை அவன் செய்யட்டும், நமக்கு கொடுத்த ஊழியத்தை நாம் செய்வோம்’ என்று நிற்கவில்லை. மாறாக பொறாமை கொண்டனர், பொங்கி எழுந்தனர், முறுமுறுத்தனர்.

இந்த சம்பவத்தை எண்ணாகமம் 16,17 அதிகாரங்களில் நீங்கள் வாசிக்கலாம். இதில் என்ன விசேஷம் என்றால் இவ்வளவு முறுமுறுப்பு குரல்கள் எழுந்த போதும் அவர்களுக்கெதிராக ஒரு வார்த்தை கூட ஆரோன் பேசவில்லை.

ஆரோனின் மௌனம் இரண்டு பேரை வாய் திறக்க வைத்தது. அந்த இரண்டு பேர் யார் தெரியுமா? முதலாம் நபர் ஆரோனின் தேவனாகிய மோசே, இரண்டாம் நபர் மோசேயின் தேவனாகிய கர்த்தர். ‘ஆரோனுக்கு விரோதமாக முறுமுறுக்க அவன் எம்மாத்திரம்?’ என்று மோசே கடிந்து கொண்டான். ‘நீங்கள் விலகி நில்லுங்கள் இஸ்ரவேல் புத்திரரை அதம்

பண்ணப்போகிறேன்' என்று கர்த்தர் கடிந்து கொண்டார்.

முறுமுறுத்தவர்களைப் பார்த்து பேசாதிருந்த ஆரோன் முகங்குப்புற விழுந்து, இந்த ஜனங்களை அழித்துவிடாதீர் என்று கெஞ்சினான். இதுதான் அவனை **பரிசுத்தன்** என்று பரவசப்பட்டு பேச வைத்தது. இன்னும் கவனியுங்கள். தேவனுடைய கடுங்கோபம் மூண்ட பொழுது தூபகலசத்தை எடுத்துக்கொண்டு செத்தவர்களுக்கும், உயிரோடு இருப்பவர்களுக்கும் நடுவாக நின்று வாதையை நிறுத்தினான்.

பிரியமானவர்களே! ஆவிக்குரிய வாழ்வில், ஊழியத்தின் பாதையில் விசேஷித்த கிருபைகள், வரங்கள், பொறுப்புகள், பதவிகள் உங்களுக்கு கிடைத்திருக்கலாம். இவைகள் உங்கள் பிரயாசத்தினாலோ, நீதியினாலோ உங்களை வந்தடையாமல் தேவனுடைய சுத்த தயவின்படி உங்களுக்கு கிடைத்ததென்று அறிக்கையிட்டு சந்தோஷப்படுங்கள் – சர்வ வல்லவரைப் போற்றி மகிழுங்கள்.

அதே நேரத்தில் இதை எல்லோராலும் ஜீரணிக்க முடியாது என்பதை மனதில் வையுங்கள். விமர்சனங்களும், வினாக்களும், விபரீத செயல்களும் விரோதமாக எழும்பி உங்களைத் தாக்குமென்பதை நினைவில் வையுங்கள்.

யார் இந்த கோராகு? யார் இந்த தாத்தா? அவர்களும் லேவியர் தான். ஆசரிப்புக் கூடாரத்தில் பணிவிடை செய்கிறவர்கள் தான். சுருங்கச் சொல்லப்போனால் ஆரோனுடைய இனத்தாரும்,



சகோதரரும் உடன் ஊழியருமானவர்களே இவர்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலை ஒவ்வொரு விசுவாசிக்கும் – ஊழியருக்கும் வரத்தான் செய்யும். ஒருசிலர் இப்பொழுதே அந்த சூழ்நிலையில் இருக்கலாம். இதை நீங்கள் எப்படி சந்திக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம்.

ஒன்று நீங்கள் மௌனமாக இருக்க வேண்டும் அல்லது மன்னித்து மறந்துவிடவேண்டும். இந்த இரண்டையும் நீங்கள் செய்வீர்களென்றால் உங்கள் பரிசுத்தம் காக்கப்படும். அதுமட்டுமல்ல, உங்கள் ஊழியம் உங்கள் கையிலேயே நிலைநிற்கும்.

ஆரோனுக்காக வழக்காட மோசே போன்ற நபரை தேவன் எழுப்புவார். அவர் உங்களுக்காக பேசி, எதிராளியின் வாயை அடைப்பார். அப்படி யார் எழும்புவார்கள்? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். சிந்தித்துப் பார்த்தால் மெய் சிலிர்க்கும்.

மோசேக்கு வாயாக ஆரோனை தேவன் வைத்தார். அந்த வாயே மௌனமாகிவிட்டால் கர்த்தர் என்ன செய்வார்? திக்கு வாயனாகிய மோசேவையே வக்கீலாக மாற்றிவிட்டார்; தான் நீதிபதியாக நின்று விட்டார்.

புரிகிறதா! நீங்கள் மௌனமாக இருக்கும் பட்சத்தில் இதுவரைக்கும் பேசாத நபரைக் கூட உங்களுக்காக பேசும்படி எழும்பச் செய்ய தேவன் வல்லவராயிருக்கிறார். இதை மறந்துவிட்டு நானா – அவனா? இரண்டில் ஒன்று பார்த்து விடுகிறேன் என்று வீறுகொண்டு எழுவீர்களானால் வீணாய்ப் போவீர்கள் எச்சரிக்கை.

உங்கள் அழைப்பு கெடும் – அமைதி கெடும் –

பரிசுத்தம் கெடும் – ஊழியம் கெடும் என்பதை நினைவில் வையுங்கள். ஊழியர்களே, மீண்டும் சொல்லுகிறேன் உங்கள் இனத்தாரால், சகோதரரால், உடன் ஊழியரால் உபத்திரவத்திற்கு உள்ளாக்கப்படலாம். உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள் என்று உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

இப்பொழுதெல்லாம் கிறிஸ்தவமும், ஊழியமும் மிகவும் வேடிக்கைக்குரியதாகவும் – வேதனைக் குரியதாகவும் மாறிவிட்டது. 'நீ கிழக்கே போனால் நான் மேற்கே போகிறேன், நீ மேற்கே போனால் நான் கிழக்கே போகிறேன்' என்று ஆபிரகாமைப் பற்றி அழகாக பிரசங்கிப்பவர்கள்; நீ கீழ் கோர்ட்டிற்கு போனால் நான் ஐகோர்டிற்கு போகிறேன், நீ ஐகோர்ட் போனால் நான் சுப்ரீம் கோர்ட் போகிறேன்' என்று நீதிமன்றபடிகளில் ஏறிக்கொண்டிருக்கிறார்கள். குடும்ப வைத்தியர் என்று ஒரு டாக்டரை வைத்திருப்பது போல இவர்களுக்காக வழக்காட நிரந்தரமாக வக்கீல்களை வைத்திருக்கிறார்கள். இவர்களை 'பரிசுத்தன்' என்று தேவன் சொல்லுவாரா? எனக்குத் தெரியாது!

'பேச்சின் மிகுதியால் பாவமில்லாமல் போகாது', 'இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்', 'உள்ளேயிருந்து வாயின் வழியே வருவது மனிதனை தீட்டுப்படுத்தும்' எனவே பிரியமானவர்களே பேச்சினால் உங்களை தீட்டுப்படுத்திக் கொள்ளாதீர்கள். குடும்பத்தலைவர்களே, திருச்சபை தலைவர்களே, நல்ல மாதிரியை உங்களுக்கு கீழானவர்களுக்கு காண்பியுங்கள். 'நான் பரிசுத்தராய் இருக்கிறது போல



நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்' என்று நம் ஆண்டவர் சொன்னது போல நீங்களும் உங்கள் கீழானவர்களுக்கு முன்பாக பரிசுத்தத்தின் மாதிரியை வைத்துவிட்டு போங்கள். நீங்கள் தான் அவர்களுக்கு திறந்த வேதாகமம். உங்களை வாசித்துதான் நடைமுறை பரிசுத்தத்தை அவர்களால் கற்றுக் கொள்ளமுடியும்.

பரிசுத்தனாகிய ஆரோனின் பல்வேறு அம்சங்களை பட்டியலிட்டு முன்பு காட்டியிருந்தேன். அதிலொன்று முன்மாதிரியான ஆரோன்.... அது எப்படி என்று இப்பொழுது விளக்க விரும்புகிறேன்.

நாதாபும், அபியூவும் மரித்தபோது ஆசாரியனாகிய ஆரோன் பாசத்தையும் – நேசத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, பரிசுத்தத்தையும் – பிரமாணத்தையும் காக்கும் பொருட்டு பிரேதத்தால் தன்னை தீட்டுப்படுத்திக் கொள்ளாதிருந்தான். இதனை ஒரு இளம் தலைமுறை கண்டது. அதன் இருதயத்திற்குள்ளே பசுமரத்தாணியைப் போல் பதிந்து விட்டது.

அந்த இளைய தலைமுறை யார் தெரியுமா? ஆரோனின் குமாரனாகிய எலெயாசர். இப்பொழுது காலச் சக்கரம் சுழல்கிறது. ஓர் என்னும் மலையில் ஆரோன், மோசே, எலெயாசர் நிற்கிறார்கள். ஆரோனின் ஒவ்வொரு வஸ்திரமாக கழற்றப்பட்டு எலெயாசருக்கு உடுத்திவிக்கப்படுகிறது. சில மணித்துளிகளில் பாகையணிந்த பிரதான ஆசாரியனாய் எலெயாசர் மாறினான். அதே நேரத்தில் கர்த்தரின் வாக்கின்படியே ஆரோன் மரித்தான்.

இந்தக் காட்சியை உங்கள் மனக்கண் முன் கொண்டு வர முடிகிறதா? அன்று ஆசாரியனாக தகப்பன் – பிணமாக மகன்கள் இன்றோ ஆசாரியனாக மகன் – பிணமாக தகப்பன்.

அப்பா !..... போய் விட்டீர்களா? என்ன செய்வேன்? என்றெல்லாம் எலெயாசர் புலம்பவில்லை. மாறாக அன்று தன் தகப்பன் மாதிரியாய் வைத்தவைகள் கண் முன்னே தெரிய பரிசுத்தத்தையும் – பிரமாணத்தையும் காத்துக் கொள்ளும்படி பேசாமல் எலெயாசர் மோசேயுடன் இறங்கி வந்தான்.

இந்த நல்ல மாதிரிக்காக பரிசுத்தன் என்ற சாட்சியை தேவன் கொடுத்தார் என நம்புகிறேன். வாழும் போது இந்த சாட்சி அவர் காதுகளுக்கு எட்டவில்லை என்றாலும் மாளும்போது இந்த சாட்சியினால் ஆயிரமாயிரம் பேர் உணரும்படி தேவன் உரைத்தார்.

ஜனங்களின் சொல் கேட்டு அவர்கள் தந்த பொன் ஆபரணங்களைக் கொண்டு கன்றுக்குட்டியை வார்ப்பித்து விக்கிரக ஆராதனைக்கு வழி வகுத்தது உண்மைதான். எனினும் அப்பொழுது அவர் ஆசாரியன் அல்ல என்பதுதான் உண்மை. அவர் தனது செயலுக்கு மனஸ்தாபப்பட்டு திருந்திய பின்னர் தேவன் அவரை ஆசாரியனாக அபிஷேகம் பண்ணப்பட ஆணையிட்டார் – அனுமதித்தார்.

புதிய ஏற்பாட்டிலே பேதுரு கிறிஸ்துவை மறுதலித்த போதும் அவன் மனம் வருந்தி – திருந்தி அழுதபொழுது அவனை ஏற்றுக்கொண்டது மாத்திரமல்ல அப்போஸ்தல ஊழியத்தில் முதன்மையான ஸ்தானத்தைக் கொடுத்தார்.



அதைப்போலவே தன் செயலுக்காக வருந்தி – திருந்தி வந்த ஆரோனை தேவன் ஏற்றுக்கொண்டது மாத்திரமல்ல, முதல் முதன்மை ஆசாரியனாக மாற்றினார்.

பிரியமானவர்களே, எவ்வளவு நல்ல ஆண்டவர் பார்த்தீர்களா? அவர் மன்னிக்கும் தயை பெருத்திருக் கிறார். பாவம் பெருகினயிடத்தில் எவ்வளவாய் கிருபை பெருகியதென்று எண்ணிப்பாருங்கள். என் அன்பு வாசகரே, இன்று விசுவாசத்தை விட்டும் விக்கிரகத்துக்கு நேராகவும் ஓடியிருக்கலாம். உங்களுக்கு ஒரு அழைப்பு. நீங்கள் ஆண்டவருக்கு வேண்டுமாம், உங்களுக்கு ஒரு ஊழியம் வைத்து இருக்கிறாராம், உடனே ஓடி வர வேண்டுமாம்.

உங்களைப் பற்றி அவருக்கு நன்றாகத் தெரியும். உங்களுக்குத்தான் அவரைப் பற்றி சரியாக தெரியவில்லை. நாம் நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டால் அவர் மன்னிக்கிறார் என்று தைரியத்துடன் அவர் கிட்டே வாருங்கள். அவர் பரிசுத்தர் மாத்திரமல்ல அவர் யெகோவா மெக்காதிஸ் (பரிசுத்தமாக்குகிற கர்த்தர்). உங்களை பரிசுத்தமாக்குகிறவர். மறந்துவிடாதீர்கள். மனம் வருந்துங்கள் – மனம் திருந்துங்கள். ஆரோனுக்கும், பேதுருவுக்கும் அன்பு பாராட்டியவர் உங்களுக்கும் அநுக்கிரகம் பண்ணுவார்.

ஆசரிப்பு கூடார வாசலிலே வெண்கலத் தொட்டி வைக்கப்பட்டிருக்கும். பலிபீடத்தின் கிட்டேயும், வாசஸ்தலத்திற்குள்ளேயும் செல்லும்போது ஆரோன் தன்

கைகளையும், கால்களையும் கழுவிக் கொள்ளுவார். அதாவது நிதம்நிதம் தன்னைப் பரிசுத்தப்படுத்திக் கொள்வார்.

இதை வாசிக்கும் போது இன்னொரு சம்பவம் நினைவிற்கு வருகிறதல்லவா? இயேசு சீடர்களின் கால்களை கழுவிய போது, வாதத்தின் முடிவில் என்னை தலையிலிருந்து கால் வரையிலும் கழுவும் என்று பேதுரு கேட்ட பொழுது, 'மூழ்கினவன் சுத்தமாயிருக்கிறான்; அவன் கைகளையும், கால்களையும் கழுவினால் போதும்' என்று இயேசு மொழிந்தாரல்லவா?

ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும் சிறுசிறு குறைவுகளை அறிக்கையிட்டு நம்மை தூய்மையாக்கிக் கொள்ள வேண்டுமென்பதே அதன் உட்கருத்து.

அபிஷேகம் பண்ணப்பட்ட, பிரதிஷ்டை பண்ணப்பட்ட ஆரோன் தன்னை நித்தம் கழுவி, சுத்தம் செய்து கொண்டு கர்த்தரின் சமுகத்தில் நின்றபடியால் **பரிசுத்தன்** என்ற சாட்சியைப் பெற்றார்.

எனக்கு அன்பானவர்களே, நீங்களும் பேச்சிலும், நடக்கையிலும், உடையிலும் நல்மாதிரியாயிருந்து நித்தம் யோவான் 17 : 17ன் படி அவரது வசனத்தினாலும் I யோவான் 1 : 7ன் படி அவருடைய இரத்தத்தினாலும் I கொரிந்தியர் 6 : 11ன்படி அவருடைய பரிசுத்த ஆவியினாலும் நித்தம் கழுவப்பட்டு ஆயத்தமாய் இருப்பீர்களென்றால் அவர் வரும்பொழுது "என் பரிசுத்தனே" என்று உங்களையும் அழைப்பார்.



3

# ஆசாரியனாகிய ஆரோன்

வேத புத்தகத்தை வாசித்துப் பார்த்தால் பல ஆசாரியர்களை உங்களால் காணமுடியும். மோசேயின் மாமனாகிய மீதியான் தேசத்து எத்திரோ கூட ஆசாரியன் தான். அக்காலத்தில் கடவுளின் திருப்பணி, திருப்பலி செய்தவர்கள் ஆசாரியர்களாக விளங்கினர். இவர்களுக்கும் கர்த்தரின் ஆசாரியர்களுக்கும் பெருத்த வித்தியாசம் உண்டு.

வேதத்தில் இரண்டு ஆசாரிய முறைகளைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. தேவன் பூமியில் கட்டளை கொடுத்து ஏற்படுத்திய முறையில் ஆரோனின் ஆசாரிய முறை. இந்த முறைமையின் முதல் ஆசாரியனாக ஆரோன் அபிஷேகம் பண்ணப்பட்டார். அதுமுதல் ஆசாரியப் பட்டம் என்பது லேவி கோத்திரத்தில் ஆரோனின் குடும்பத்தாருக்கு வழிவழியாய் வருகிற உரிமையாயிற்று.

எனவே லேவி கோத்திரத்திற்கு வெளியே ஆரோனின் குடும்பத்தாருக்கு அப்பாலே இந்த உலகத்தின் முடிவு பரியந்தம் வேறுயாரும் கர்த்தருக்கு அவரின் ஆலயத்தில் பணி விடை செய்கிற ஆசாரியர்களாக இருக்க உரிமை கிடையாது.

இப்பொழுது உங்கள் சிந்தையில் புதுக்கேள்வி ஒன்று புயலெனப் புறப்படுவதை என்னால் புரிந்து

கொள்ள முடிகிறது. அப்படியானால் யூதா கோத்திரத்தில் பிறந்த இயேசு எப்படி பிரதான ஆசாரியரானார்?, 'புறஜாதிகளாகிய நாம் எப்படி தேவனுக்கு ஆசாரியர்களாக முடியும்?' உங்கள் கேள்வி நல்ல கேள்வி, நியாயமான கேள்வி.

நான் தான் 'இரண்டு விதமான ஆசாரிய முறைமை உண்டென்று முதலிலே சொல்லி விட்டேனே'. அது எது என்பதைத்தான் இப்பொழுது விளக்கப் போகிறேன். ஆரோன் பிறப்பதற்கு முன்பாகவே, அவர் தாத்தா பிறவாததற்கு முன்பாகவே அவர் முற்பிதாவாகிய ஆபிரகாமை மெல்கிசேதேக் என்ற ஆசாரியன் ஆசிர்வதித்து அப்பமும், திராட்சை ரசமும் கொடுத்தார். அவருக்கு ஆபிரகாம் தசம பாகத்தை எல்லாம் கொடுத்தாரென்று ஆதியாகமம் 14ஆம் அதிகாரம் 18ஆம் வசனத்தில் நீங்கள் வாசிக்கலாம்.

இந்த மெல்கிசேதேக்கின் மற்ற விபரங்களை எல்லாம் ஆவியானவர் மறைத்து விட்டார். அவர் எந்த கோத்திரத்தை சார்ந்தவரென்றோ, அவர் இன்னாரின் குமாரனென்றோ ஒருவராலும் சொல்ல முடியாது. (எபிரெயர் 7 : 3). அவருக்கு ஆரம்பமும், முடிவும் கூட கிடையாது. எனவே லேவி கோத்திரத்திற்கு வெளியேயும் எந்தக் கோத்திரத்தானும் ஆசாரியனாக முடியும் என்ற வழிகாட்டலையுடைய இந்த முறைமைக்கு மெல்கிசேதேக்கின் முறைமை என்று பெயர்.

ஆரோனின் ஆசாரிய முறையை இஸ்ரவேலருக்குள்ளே தேவாலயத்தில் செய்கிற லேவி கோத்திரத்தின் உரிமை முறை. ஆனால்



மெல்கிசேதேக்கின் முறைமையோ முழு உலகத்திலுள்ளோர் உன்னதமான தேவனுக்கு ஆசாரிய உரிமை தருகிற மகிமையான முறை. இந்த முறைமையின் படிதான் நம்முடைய இயேசு பிரதான ஆசாரியரானார். நாம் ஆசாரியர்களாக அழைக்கப்பட்டிருக்கிறோம். (எபிரெயர் 7 : 17)

சற்று குழப்பமாக இருக்கிறதா? கடினமாக இருக்கிறதா? விட்டுவிடுங்கள், தொடர்ந்து மற்றவைகளை சிந்திப்போம். ஆரோன் தானாக ஆசாரியனாக மாறவில்லை. அது தேவனின் ஆணை தேவனின் அழைப்பு. அது தேவன் தந்த உரிமை.

ஊழியங்களில் வித்தியாசம் உண்டு. கர்த்தர் ஒருவரே. எனவே அழைத்த அழைப்பின்படி ஊழியம் செய்வது தேவனுடைய சித்தம். லேவியர் எல்லாருமே தேவனுடைய சுதந்திரம்தான். அவர்கள் எல்லோருமே ஆசரிப்புக் கூடாரத்துக்கு அடுத்த பணிவிடைகளை செய்ய உரிமை பெற்றவர்கள். ஆனால் பரிசுத்த நியமங்களை நிறைவேற்றுகிற உரிமம் ஆரோனின் குடும்பத்தாருக்கு மாத்திரமே அருளப்பட்டுள்ளது. இது புதிய ஏற்பாட்டின் ஊழியத்திற்கு நல்ல ஒரு மாதிரி. அடக்கத்தோடும், அறிவோடும் இந்த மாதிரியின்படி நடந்து கொண்டால் சபைகளிலும் ஊழியத்திலேயும் குழப்பமே வராது.

தமிழகத்தில் நான் நேசிக்கும் நல்ல ஊழியர் ஒருவர் மிகச்சிறந்த அருளுரையாளர் அவருடைய செய்திகளை ஆர்வமுடன் கேட்பேன்.

'பழைய ஏற்பாட்டில் தான் இஸ்ரவேலர், ஆசாரியர் என்ற இரண்டு பிரிவுகள் உண்டு. புதிய ஏற்பாட்டில் ஊழியர், விசுவாசிகள் என்ற இரண்டு பிரிவு கிடையாது. இரட்சிக்கப்பட்ட எல்லோருமே ஊழியம் செய்யத் தகுதி பெற்றவர்கள். எல்லோரையுமே தேவன் ஆசாரியராக்கி யிருக்கிறார். எனவே யாரையும் நீங்கள் விசேஷமாக கருதத் தேவையில்லை?

இந்த வார்த்தைகள் உற்சாகமூட்டுபவைகளாக இருப்பது உண்மை. ஆனால் கூற்று நூறு சதவீதம் உண்மையல்ல.

அப்போஸ்தலர் நடபடிகள் முதல் யூதா நிருபம் வரை எல்லாப் பகுதிகளையும் நிறுத்தி நிதானமாக வாசித்துப் பாருங்கள். நிஜம் எதுவென்று புரிந்து விடுவீர்கள்.

நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்கள், நீங்கள் தேவனுடைய பண்ணையுமாய் இருக்கிறீர்கள். (1 கொரிந்தியர் 3 :9)

நாங்கள் ஜெபத்தில் தரித்திருப்போம். நீங்கள் உங்களுக்குள்ளே ஏழுபேரை தெரிந்து கொள்ளுங்கள். (அப்போஸ்தலர் 6 : 4)

உங்களை நடத்துகிறவர்கள்... அவர்களுக்கு கீழ்படியுங்கள். (எபிரெயர் 13 : 17)

இப்படி ஏராளமான வசனங்கள் ஊழியர், விசுவாசிகள் என்ற இருவகை கூட்டத்தை குறித்து தெளிவாகப் பேசுகிறது.

எனவே எனக்கன்பானவர்களே, நமக்கு வாக்குப் பண்ணப்பட்டிருக்கிற மெய்யான ஆசாரியத்துவம் வருங்காலத்துக்குரியது. அதுவரை உங்கள்



அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொண்டு ஒழுங்கின்படி ஓடுங்கள்.

இந்த ஆசாரிய ஊழியத்திற்கு ஆரோன்

1. அழைக்கப்பட்டார் (எபிரெயர் 5 : 4)
2. தெரிந்து கொள்ளப்பட்டார் (சங். 105 : 26)
3. வேறுபிரிக்கப்பட்டார். (யாத்திராகமம் (28 : 1)

இவை மூன்றும் ஊழியத்திற்கான முக்கியமான தகுதிகளென்பதை நினைவில் வையுங்கள். பவுலும் இந்த மூன்று காரியங்களையும் தம் கடித முகவுரைகளில் முக்கியப்படுத்தியிருக்கிறார் என்பது குறிப்பிட வேண்டிய சிறப்பம்சமாகும். (ரோமர் 1 : 1) பவுலையும், பர்னபாவையும் இந்த கனமான ஊழியத்திற்கு கர்த்தர் அழைத்தார். அவர்களோ அழைப்பை பெற்ற பின்னும் அந்தோகியா திருச்சபையில் போதகராகவும், தீர்க்கதரிசியாகவும் ஊழியம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது என்ன நடந்தது தெரியுமா? அப்போஸ்தலர் நடபடிகள் 13 : 2 வாசித்துப் பாருங்கள், 'பவுலையும் பர்னபாவையும் நான் அழைத்த ஊழியத்திற்கு பிரித்து விடுங்கள்' என்று ஆவியானவர் திருவுளம் பற்றினார்.

எனவே அழைப்பு என்பது வேறு. அதற்குரிய வேளை என்பது வேறு. முந்தி வருவது அழைப்பு, அடுத்து வருவது வேளை. வேளை வருகிறபோது வேறு பிரிக்கப்பட்டு வெளியே வருவது அவசியம். அதுவே தேவனின் சித்தம்.

பிரியமானவர்களே, நீங்கள் விசுவாசியாகவோ, ஊழியராகவோ இருக்கலாம். இப்போதைய நிலை சில விசேஷமான ஊழியப் பணிக்கென உங்களுக்கு அழைப்பு

இருப்பதாக உள்ளத்தில் உணர்வுகள் தோன்றலாம் அது நல்லது. ஆனால் அதற்காக உடனே காரியத்தில் இறங்கி விடாதீர்கள்.

பவுலும், பர்னபாவும் தாங்கள் இருந்த சபையிலேயே தங்கி உபவாசித்து கர்த்தருக்கு ஆராதனை செய்து வந்தார்கள். ஆவியானவர் திருவுளம் பற்றிய பிறகு சபையார் ஜெபித்து வேறுபிரித்து அனுப்பி வைக்கிறார்கள். இதுதான் வேத ஒழுங்கு, பழைய ஏற்பாடானாலும், புதிய ஏற்பாடானாலும் சிறப்புப் பணிக்கென அழைக்கப்பட்ட ஒருவர் அவர் தெரிந்து கொள்ளப்பட்ட தலைவர்களால் வேறுபிரிக்கப்பட வேண்டியது அவசியம்.

ஆசாரியனின் சிறப்புகள்

1. அபிஷேகம் பண்ணப்பட்டவர்.
2. பரிசுத்த வஸ்திரம் தரித்தவர்.
3. மார்பதக்கம் அணிந்தவர்.
4. தீர்க்கதரிசியானவர்.
5. போதிக்கிறவர்.
6. திறப்பில் நிற்கிறவர்.
7. கைகளை உயர்த்தி ஆசீர்வதிப்பவர்.

மேற்கண்ட ஏழும் ஒரு ஆசாரியனுக்கு தேவன் கொடுத்திருக்கிற கட்டளையும் உரிமையும், சிலாக்கியமுமாய் இருக்கிறது. இந்த ஏழும் ஆசாரியனாகிய ஆரோனுக்குள் இருந்தது மிகப்பெரிய சிறப்பாகும்.



இந்த ஏழு சிறப்பம்சங்கள், முதல் பிரதான ஆசாரியனாகிய ஆரோனிடத்தில் மாத்திரமல்ல, மெல்கிசேதேக்கின் முறைமையின்படி பிரதான ஆசாரியரான இயேசு கிறிஸ்துவிடமும் இருந்தது. ஆகவே புதிய ஏற்பாட்டின் ஆசாரியத்துவ சிலாக்கியங்களை நம்புகிற ஒவ்வொரு ஊழியரும் விசுவாசிகளும் இந்த ஏழு அனுபவங்களை பெற்றிருத்தல் அவசியம்.

**1. அபிஷேகம் பண்ணப்பட்டவர் :**

ஆரோனையும் அவன் குமாரரையும் பரிசுத்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணுவாயாக என்று கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டிருந்தார். மோசேயும் அப்படியே செய்தார்.

தேவனுக்கு ஊழியஞ்செய்ய அழைப்பு, தெரிந்து கொள்ளுதல், வேறு பிரித்தல் என்பது மிக அவசியமென்றாலும் அவர்கள் அபிஷேகிக்கப்படுவது பிரதானமான காரியமாகும். ஆசாரியர்களுக்கு மாத்திரமல்ல இராஜாக்களுக்கும் இதுவே பிரதானம். தெரிந்து கொள்ளப்பட்டவர்களை அபிஷேகித்த பிறகே அந்த பொறுப்புகளுக்கு உரியவராக்குகிறார். அதாவது அபிஷேகம்தான் அழைப்பிற்கு உரிய அங்கீகாரம்.

இது புதிய ஏற்பாடுக்கும் பொருந்தும். இராஜரீக ஆசாரியர்களாக தேவன் நம்மை முன் குறித்திருந்தாலும் அவருடைய திருப்பணியை செய்வதற்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகமே அங்கீகாரம் ஆகும்.

கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு மூன்றரை ஆண்டுகள் பயிற்சி கொடுத்தார். பிசாசுகளை துரத்தவும்,

நோய்களை குணமாக்கவும் அதிகாரம் கொடுத்தார். ஆனால் அவர் பரமேறி செல்வதற்கு முன்பாக சீஷர்களுக்கு வேறு விதமாக கட்டளை கொடுத்தார். பலர் அதை சிந்தையில் வைப்பதில்லை.

சிலுவையில் தொங்கிய இயேசு கடைசியாக சொன்ன ஏழு வார்த்தைகளை குறித்து ஒவ்வொரு ஆண்டும் பேசுசிற – கேட்கிற கிறிஸ்தவர்கள் அவர் உயிர்த்தெழுந்த பிறகு முதலாவது சொன்ன ஏழுவார்த்தைகளை சிந்திக்க சிந்தையில்லாமல் இருப்பது ஏனென்றும் எனக்குப் புரியவில்லை.

'ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்' (அப்போ. 1 : 5)

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறுவதற்காக காத்திருக்கும்படி இயேசு கட்டளையிட்டார். அந்த வார்த்தையை விசுவாசித்து காத்திருந்த அப்போஸ்தலர்களை (சீஷர்களை) பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணினார். அவர்களை வல்லமையினாலும், வரங்களினாலும் தேவன் நிரப்பினார். புதிய ஏற்பாட்டை பொறுத்தவரையில் ஊழியம் செய்வதற்காக மனிதர்கள் கொடுக்கிற அங்கீகாரம் எல்லாம் திருச்சபையின் ஒழுங்கினிமித்தம் உண்டானது. அது இரண்டாம் பட்சமே. முதன்மையானது எது தெரியுமா? பரலோகத்தின் தேவன் தாம் தெரிந்து கொண்டதின் அடையாளமாக, தெரிந்து கொண்டதற்கு அச்சாரமாக பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணுகிறார். இதுவே தேவனுடைய ஊழியத்தை



செய்வதற்கு ஒரு மனிதனுக்கு தேவன் கொடுக்கிற அங்கீகாரமாகும். இதற்கான ஆதாரத்தைத்தான் அப்போஸ்தலர் நடபடிகள் முதல் இரண்டு அதிகாரத்தில் காண்கிறோம்.

133 ஆம் சங்கீதத்தை வாசித்துப் பாருங்கள். கருத்தாய் வாசித்தால் அது ஆரோனின் அபிஷேக ஆராதனையின் காட்சிகளை கண் முன்னே கொண்டு வந்து நிறுத்திவிடும்.

'அது அவன் சிரசின் மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியில் வடிகிறதும். அவனுடைய அங்கிகளின் மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்திற்கு ஒப்பாயிருக்கிறது'

நல்ல தைலமாகிய பரிசுத்த தைலம் சிரசின் மேல் ஊற்றப்பட்ட உடன் அது நேரடியாக தாடியின் மேல் வடிந்து விடாது. சற்று சிந்தித்துப் பாருங்கள் தலையில் ஊற்றப்பட்ட தைலமானது நெற்றி, கண், காது, மூக்கு, வாய் இவைகளின் மேல் வழிந்த பிறகு தான் தாடியில் வடியும், வடியும் தைலமானது வஸ்திரத்தின் மேல் இறங்கும். அதாவது அபிஷேகம் என்பது சர்வ அங்கத்தையும் பரிசுத்தப்படுத்துகிறது – பரிமளக்கச் செய்கிறது.

எனவே அபிஷேகம் பண்ணப்பட்டவனுக்கு புதிய சிந்தை – புதிய பார்வை – புதிய கேள்வி ஞானம் – புதிய வார்த்தை இவைகள் உண்டாக வேண்டும்.

இராஜரீக ஆசாரியரென்று மேன்மை பாராட்டுகிற நீங்கள் இப்படிப்பட்ட அபிஷேகத்தினால் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறீர்களா? புதிய சிந்தை, புதிய பார்வை

உண்டா? புதிய கேள்வி, புதிய வார்த்தை உண்டா? என்று சோதித்துப் பாருங்கள். அப்படிப்பட்ட அபிஷேகம் உங்களில் இல்லையெனில் ஊழியத்திற்கு நீங்கள் தகுதியற்றவர்கள் என்பதே உண்மை.

பழைய ஏற்பாட்டின் ஊழியத்தைவிட புதிய ஏற்பாட்டின் ஊழியம் கனமுள்ளது – அழியாமையுள்ளது – மகிமையானது. அப்படிப்பட்ட ஊழியத்திற்கு அபிஷேகம் அவசியமென்றால் மகிமையின் ஊழியத்திற்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் எவ்வளவு அவசியமென்று யோசித்துப் பாருங்கள்.

**2. பரிசுத்த வஸ்திரம் தரித்தவன் :**

ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் பரிசுத்த வஸ்திரங்களை உண்டு பண்ணுவாயாக என்று கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டிருந்தார். அந்த பரிசுத்த வஸ்திரங்களையே ஆரோன் கடைசி வரைக்கும் உடுத்தியிருந்தார். அவைகளில் பிரதானமான ஆறு காரியங்களை எழுதுகிறேன் கவனியுங்கள்.

1. உள்ளங்கி.
2. மேல் அங்கி.
3. ஏபோத்.
4. மார்பதக்கம்.
5. தலைப்பாகை.
6. இடைக்கச்சை. (யாத்திராகமம் 28 : 2–4).

இந்த வஸ்திரங்கள் ஆரோனுக்கு அலங்கார மாகவும், மகிமையாகவும் இருக்கும்படி தேவனால் அருளப்பட்டதாகும். புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள்



இவ்வஸ்திரங்களின் ஆவிக்குரிய பொருளை புரிந்து கொண்டு அதற்கு ஒப்ப நடப்பார்களானால் அவர்கள் வாழ்வும் பரிசுத்த அலங்காரமாகவும், திவ்ய மகிமையுள்ளதாகவும் இருக்கும்.

நிர்வாணமாகிய அவலட்சணம் வெளியே காணாதபடிக்கு உள்ளங்கி அணிய வேண்டும். இது உள்ளான பரிசுத்தத்தை காண்பிக்கிறது.

நீண்ட மேல் அங்கி அதன் கீழ்ப்பகுதி பொன் மணிகள் இணைக்கப்பட்டிருக்கும். ஆசாரியனின் ஒவ்வொரு அசைவிலும் இந்தப் பொன் மணிகள் கினி, கினியோசையை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். அதாவது புறம்பான பரிசுத்தத்தையும், ஆவியில் நிறைந்துள்ள அனுபவத்தையும் காட்டுகிறது. ஏபோத் தேவசித்தம் அறிதலையும், மார்ப்பதக்கம் என்பது இஸ்ரேவேலின் 12 கோத்திரத்தையும் நெஞ்சிலே சுமந்து கொண்டு தேவ சமூகம் செல்வதையும், (ஆத்ம பாரத்தையும் குறிக்கிறது.) இடைக்கச்சையென்பது சத்தியத்தையும், (உபதேசத்தில் உறுதி) தலைப்பாகை என்பது சிந்தையில் பரிசுத்தம் என்பதையும் காட்டுகிறது.

எனவே அபிஷேகம் பெற்றவர்கள் உள்ளும், புறமும் தூயவர்களாய், ஆவியில் நிறைந்தவர்களாய், ஆத்ம பாரம் உடையவர்களாய் சத்தியத்தில் நிலைத்தவர்களாய், சிந்தையில் பரிசுத்தமுள்ளவர்களாய் இருத்தல் அவசியம். இப்படிப்பட்டவர்களே 'கர்த்தருடைய பரிசுத்தன்' என்று அழைக்கப்படுவார்கள்.

**3. மார்ப்பதக்கம் அணிந்தவன் :**

பரிசுத்த வஸ்திரத்தில் இது ஒன்றென எண்ணப்பட்டாலும் இதன் விசேஷத்தினை புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக இஃதினை விளக்கி எழுதுகிறேன். இந்த மார்ப்பதக்கத்தில் பன்னிரெண்டு விதமான கற்கள் பதிக்கப்பட்டிருக்கும். அந்த பன்னிரெண்டு கற்களும் இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரத்திற்கும் அடையாளக் குறியாகும். அதாவது அபிஷேகம் பண்ணப்பட்ட ஆசாரியன் எப்பொழுது எல்லாம் தேவசமூகத்தில் பிரவேசிக்கிறானோ அப்பொழுதெல்லாம் சமஸ்த இஸ்ரவேலரையும் நெஞ்சில் சுமந்து கொண்டு போகிறான் என்று அர்த்தம்.

அபிஷேகம் பண்ணப்பட்டவன் என்றால் தன்னுடைய காரியங்களை நெஞ்சிலே சுமந்து கொண்டு போகிறவன் அல்ல. ஆத்ம பாரம் நிறைந்தவனாய் அவர்களைக் குறித்த நினைவோடு தேவ சமூகத்தில் நிற்கிறவன் என்று பொருள்.

சற்று சிந்தித்துப் பாருங்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் நமக்கு எதற்கு? பாடி, பரவசப்பட்டு பற்பல பாஷைகள் பேசி மகிழ மட்டுமா? அல்ல... அல்ல... பாவத்தில் மாளுகிற, பரமனை அறியாத பல்லாயிரக்கணக்கான மக்களை பரலோகத்திற்கு நேராய் திசை திருப்பும் கரிசனையோடு வாழ்வதற்காக.

இயேசு கிறிஸ்துவின் மேல் கர்த்தருடைய ஆவியானவர் இருந்தார். எதற்கு தெரியுமா? அவரே சொல்கிறார் கேளுங்கள்.



‘சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயம் கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும்.... என்னை அனுப்பினார்’ (ஏசாயா. 61 : 1–3)

அபிஷேகத்தினுடைய பிரதான நோக்கம் ஆத்தும பாரமே என்பதை இவ்வசனத்தின் மூலம் நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஆத்தும பாரமில்லாதவன் மார்ப்பதக்கம் அணியாதவன். மார்ப்பதக்கம் அணியாதவன் பூரண பரிசுத்த வஸ்திரம் இல்லாதவன். நான் சொல்வது புரிகிறதா? கர்த்தருடைய பரிசுத்தன் என்று நீங்கள் அழைக்கப்படும்படிக்கு நீங்கள் பெற்ற அபிஷேகத்தினால் ஆத்தும ஆதாயராக செயல்படுங்கள்.

**4. தீர்க்கதரிசியானவர் :**

ஆசாரியனின் இன்னொரு முகம் என்ன தெரியுமா? அவன் தேவனுடைய தீர்க்கதரிசி. தேவன் ஆரோனைக் குறித்து சொல்லும்போது அவன் தீர்க்கதரிசி என்றால் தேவனுடைய வாயாக விளங்குபவர். ஆரோன் மோசேயிக்கு வாயாக விளங்கினது மாத்திரமல்ல தேவனுடைய வாயாகவும் விளங்கினார்.

ஒரு தீர்க்கதரிசிக்கு பல்வேறு பணிகள் உண்டு.

1. வருங்காரியங்களை அறிவிப்பது.
2. தெய்வ ஜனங்களை எச்சரிப்பது.
3. தெய்வ ஜனங்களுக்கு ஆறுதல் சொல்வது.

4. தெய்வ ஜனங்களுக்கு ஆலோசனை சொல்வது.

5. தேவ ஜனங்களுக்காய் திறப்பிலே நிற்பது.

6. மக்களுக்காய் மன்றாடுவது.

7. பாவ நிவிர்த்தி செய்வது, பலி செலுத்துவது.

இதைத்தான் வேதத்தில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசிகள் செய்தார்கள். அதிலும் ஆசாரியராய் இருந்தவர்கள் இந்தப் பணியை செய்தார்களென்பது குறிப்பிடத்தக்கது.

இப்புத்தகத்தின் பிரதான பாத்திரமாகிய ஆரோன் இந்த ஏழு காரியங்களையும் தன் ஆசாரிய பணியிலே செய்ததினால் ஆசாரியன் ஒரு தீர்க்கதரிசி என்பதை விளங்கப் பண்ணினார்.

எனக்கு அன்பானவர்களே! எச்சரித்து, புத்தி சொல்லி, ஆலோசனை தந்து, திறப்பிலே நின்று மக்களுக்காய் பரிந்து பேசி மக்களின் பாவ நிவர்த்திக்கானவைகளை செய்வீர்களென்றால் நீங்கள் தீர்க்கதரிசி மாத்திரமல்ல அழைப்பை அறிந்த ஆசாரியராய் இருப்பீர்கள். 'கர்த்தருடைய பரிசுத்தன்' என்று தேவனால் அழைக்கப்படுவீர்கள்.

**5. போதிக்கிறவர் :**

ஆசாரியனாகிய ஆரோன் ஒரு நல்ல போதகர். இந்த போதிக்கும் அதிகாரத்தை – அங்கீகாரத்தை யார் வழங்கியது தெரியுமா? லேவியராகமம் 10 : 11 ஐ வாசித்துப் பாருங்கள்.

'கர்த்தர் மோசேயைக் கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்ன **சகல பிரமாணங்களையும் அவர்களுக்குப் போதிக்கும்படிக்கும்,** இது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும் என்றார்.'



ஒவ்வொரு ஆசாரியனும் கத்தியை எடுத்துக்கொண்டு காளைகளை வெட்டுகிறவனாக மாத்திரமல்ல கர்த்தரின் பிரமாணத்தை கருத்தாய் போதிக்கிறவனாகவும் இருத்தல் வேண்டும்.

மல்கியா 2 : 7ஐ வாசித்துப் பாருங்கள். ஒவ்வொரு ஆசாரியனும் திருவசனத்தை போதிக்கும் உக்கிராணத்துவத்தை உடையவர்கள் என்ற உண்மை விளங்கும்.

'ஆசாரியனின் உதடுகள் அறிவைக் காக்க வேண்டும். வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே; அவன் சேனைகளின் கர்த்தரின் தூதன்.'

ஒவ்வொரு ஆசாரியனும் பரலோகத்திலிருந்து செய்தியை கொண்டு வருகிற தூதுவன் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நற்செய்தியை அறிவிப்பது மாத்திரமல்ல திருவசனத்தை பகிர்ந்தளிப்பவராகவும் நீங்கள் இருத்தல் வேண்டும். இயேசு கிறிஸ்து சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைகொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் (போதியுங்கள்) என்றார்.

பிரியமானவர்களே! நற்செய்தி என்பது வேறு, உபதேசம் என்பது வேறு. ஆசாரியன் என்பவன் நற்செய்தியாளனாக மாத்திரமல்ல உபதேசத்தை உரிய விதத்தில் விளக்குகிறவனாகவும் – விதைக்கிற வனாகவும் இருத்தல் வேண்டும்.

ஆரோன் தேவனுடைய பிரமாணங்களை நிறைவேற்றுகிறவனாக மாத்திரமல்ல தெய்வ ஜனம்

செயலாற்றும்படி அவைகளைப் போதிக்கிறவனாகவும் இருந்தார். திருவசனத்தை – திருசட்டத்தை போதித்த அவரை 'கர்த்தரின் பரிசுத்தன்' என்று தேவன் அழைத்தது தகுதியானதே.

**6. திறப்பிலே நிற்பவர் :**

ஆரோனின் ஆசாரியப்பணியிலேயே மிக உன்னதமானது, அவர் திறப்பிலே நின்றதுதான். ஏதோ ஒருமுறை அல்ல. இஸ்ரவேலர் தவறுகிற ஒவ்வொரு முறையும் – இஸ்ரவேலரின் மேல் தேவ கோபம் இறங்கின ஒவ்வொரு முறையும். இவன் திறப்பின் வாசலிலே நின்றதுதான் தனிச்சிறப்பு.

ஆசாரியனாகிய அவர் தொழுகையோடு தன் ஊழியத்தை நிறுத்திக் கொள்ளாமல் அழுகையோடும், குப்புற விழுகையோடும் தேவனை நோக்கி புலம்பியது மாத்திரமல்ல. செத்தவர்களுக்கும் உயிரோடு இருப்பவர்களுக்கும் நடுவே நின்று வாதையை நிறுத்தியவர்.

சொந்தப்பிள்ளைகள் மரித்து கிடந்த பொழுது எந்த பிரதிபலிப்பையும் காட்டாத இவர் எதிர்த்தவர்கள் செத்த பொழுதோ கொதித்து, குதித்து, ஓடி நடுவில் நின்றாரே அதை எண்ணும் பொழுது என் மெய் சிலிர்க்கிறது.

ஆரோன் மௌனமாய் இருந்திருந்தாலோ அல்லது தாமதமாய் சென்றிருந்தாலோ வாதையில் எவருமே தப்பித்திருக்க முடியாது. திறப்பில் நின்ற ஆரோனால் பிழைத்தவர்களின் எண்ணிக்கை ஏராளம்.

பிரியமானவர்களே! இந்த தேசத்திற்கு இப்படிப்பட்ட ஆரோனாய் நீங்கள் எழ வேண்டும் – அழ வேண்டும் – தேவ சமூகத்தில் விழ வேண்டும். எவனோ சாகிறான்



எதிரிதானே சாகிறான் என்று வாளா இருந்துவிடக் கூடாது. நான் செத்தாலும் சாகிறேன். என் தேசம், என் மக்கள் பிழைக்க வேண்டும் – தழைக்க வேண்டும் என்று நீங்கள் திறப்பிலே நிற்க வேண்டும்.

ஆசாரியன் என்பவன் அலங்கார வஸ்திரம் தரித்து, ஆதாயங்களை அனுபவிக்க அழைக்கப்பட்டவனல்ல. வஸ்திரங்களை கிழித்துக் கொண்டு வாதையை தேசத்தை விட்டு துரத்த, திறப்பிலே நிற்க தெரிந்து கொள்ளப்பட்ட தியாகி என்பதை மறந்துவிடக்கூடாது.

ஆரோனின் இந்த தியாகச் செயல் அவருடைய ஆசாரியத்துவத்தை இன்னும் மின்னச் செய்தது. அதனால் தான் 'கர்த்தரின் பரிசுத்தன்' என்று தேவனையே சொல்ல வைத்தது.

**7. கைகளை உயர்த்தி ஆசிர்வதிப்பவர் :**

'ஆரோன் ஜனங்களுக்கு நேராக தன் கைகளை உயர்த்தி, அவர்களை ஆசிர்வதித்து....... இறங்கினார். பின்பு மோசேயும், ஆரோனும் ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசித்து வெளியே வந்து, ஜனங்களை ஆசீர்வதித்தார்கள்' (லேவியராகமம் 9 : 22,23)

ஆசாரியர்கள் தேவ ஜனத்தை ஆசீர்வதிப்பதற்காக தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள். அவர்கள் கூறும் ஆசீர்வாதத்தை தேவன் அங்கீகரிக்கிறார்.

என் அன்பு ஊழியர்களே! உங்கள் விசுவாசிகளை மனப்பூர்வமாகவும் சந்தோஷமாகவும் கஞ்சத்தனம் இல்லாமல் தயாள குணத்தோடும் ஆசீர்வதிக்க வேண்டும்.

ஆபிரகாம் யுத்தத்திற்கு போய் திரும்பி வந்தபொழுது அவன் அழைத்து அல்ல செய்தி

அறிந்தவுடன் ஆபிரகாமுக்கு எதிர்கொண்டு போய் ஆசாரியனாகிய மெல்கிசேதேக்கு அப்பமும், இரசமும் ஈந்து ஆண்டவரின் திருநாமத்தால் ஆசீர்வதித்ததை எண்ணிப்பாருங்கள்.

நம்முடைய விசுவாசிகளுக்கு கிட்டுகிற வெற்றி, உயர்வு, நன்மைகள் இவைகளைப் பற்றி கேள்விப்பட்ட வுடன் ஓடிச் சென்று அவர்களை வாழ்த்தி ஆசீர்வதிக்க வேண்டும். இப்படிப்பட்ட ஆவியை ஆசாரியனிடத்தில் கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

ஆசாரியனாகிய ஏலி நம்முடைய கணிப்பின்படி குறைவுள்ளவராக இருக்கலாம். ஆனால் தேவாலயத் திற்கு வந்து மனக்கிலேசத்துடன் இதயத்தை ஊற்றிவிட்ட அன்னாளை, 'சமாதானத்துடனே போ; நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப் பத்தின்படி அவர் உனக்குக் கட்டளை இடுவாராக என்றான்' (I சாமுவேல் 1 : 17) அந்த ஆசீர்வாதம் அப்படியே பலித்தது.

ஆரம்பத்தில் அன்னாளுடைய செய்கையும், அழுகையும் ஏலிக்குப் புரியவில்லை. இந்தப் பேதை, போதையில் இருந்தது போல தோன்றியது. ஆனால் விபரத்தை விளங்கிக் கொண்ட பொழுதோ விவேகமாய் ஏலி நடந்து கொண்டதை எண்ணிப்பாருங்கள்.

சில விசுவாசிகளை வித்தியாசமாக புரிந்து கொண்டிருக்கலாம். ஆனால் விஷயத்தை முழுமையாக அறிந்த பின்பு விசேஷமாய் அவர்களை ஆசீர்வதியுங்கள்.



சில போதகர்கள் ஆசீர்வதிப்பதைவிட சபிப்பதையே ஆயுதமாக கையில் வைத்துள்ளார்கள். சத்தியத்தினி மித்தம் அல்ல. இவர் சபித்து விடுவாரோ என்று அஞ்சியே சில விசுவாசிகள் தங்கள் போதகருக்கு கீழ்படிகிறார்கள்.

என்னிடத்தில் ஒரு சகோதரன் சொன்னது இன்னும் என் மனதை நெருடிக்கொண்டிருக்கிறது, 'அய்யா! எங்க பாஸ்டருக்கு தெரிஞ்சா சபிச்சிடுவாரு சாதாரணமாய் அல்ல. பிரசங்க பீடத்தில் இருந்து கொண்டே சபிப்பார்' இப்படியெல்லாம் விசுவாசிகளை பயமுறுத்தும்படியாக அல்ல. அவர்களை ஆசீர்வதிக்கவே தேவன் நம்மை ஆசாரியராக்கியுள்ளார்.

இப்படிப்பட்ட பாதிப்பிலுள்ள தேவப்பிள்ளைகளே! உங்களுக்கு ஒரு வார்த்தை வேத வசனம் என்ன சொல்கிறது தெரியுமா? **'காரணமில்லாமல் இட்ட சாபம் பலிக்காது'** அது பாஸ்டர் போட்டாலும் சரி, அது மாஸ்டர் போட்டாலும் சரி முகாந்திரமில்லாத சாபங்கள் உங்களை எந்தவிதத்திலும் பாதிக்காது.

அதே நேரத்தில் தேவனுடைய ஊழியர்கள், ஆசாரியர்கள் உங்களை ஆசீர்வதிக்கும்படி நீங்கள் பாத்திரவான்களாய் நடந்து கொள்தல் வேண்டும், 'நீ எவ்வளவு நேரம் வெறித்திருப்பாய்' என்று ஏலி கேட்டபொழுது அன்னாள் சற்றும் கோபப்படவில்லை – கொந்தளிக்கவில்லை. மாறாக 'அப்படியல்ல ஆண்டவனே' என்று மென்மையான பிரதியுத்திரம் சொன்னாள். அதன்பின் என்ன நடந்தது தெரியுமா?

அதட்டினவனும், அலட்சியப்படுத்தினவனுமாகிய ஆசாரியனே ஆசீர்வதிக்கிறவனாக மாறிவிட்டான். உங்கள் மென்மையான பதில்கள் மேன்மையான ஆசீர்வாதத்தை கொண்டு வருமென்பதை மறந்து விடாதீர்கள்.

ஆசாரியனாகிய ஆரோன் தெய்வ ஜனத்திற்குப் பாவநிவர்த்தி செய்தது மாத்திரமல்ல எவர் மேலும் காழ்ப்புணர்ச்சி வைக்காமல் களிப்போடு கரங்களை உயர்த்தி ஆசீர்வதித்தான். கர்த்தர் இதயம் மகிழ்ந்தது. ‘கர்த்தரின் பரிசுத்தன்’ என்று மெச்சியது.

ஆம், பிரியமானவர்களே! ஆவியில் நிறைந்தவர்களாய், பரிசுத்த வஸ்திரம் தரித்தவராய், ஆத்ம பாரம் உள்ளவராய் தெய்வ வார்த்தையை சொல்பவராய், திறப்பில் நிற்கிறவராய், மக்களை ஆசீர்வதிப்பவராய் நீங்கள் இருந்தால் நீங்கள் ஒரு ஆசாரியன். உங்களைப் பார்த்து ‘கர்த்தரின் பரிசுத்தன்’ என்று பரமன் சாட்சி கொடுப்பார்.



# 4

# சகோதரனாகிய ஆரோன்

‘லேவியனாகிய ஆரோன் உன் சகோதரன் அல்லவா?’ (யாத் 4 : 14). ‘உன் சகோதரனாகிய ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு’ (யாத். 28 : 1). மோசேக்கு ஒரே ஒரு சகோதரன் மாத்திரமே உண்டு. எனவே தேவன் ‘உன் சகோதரன்’ என்று மாத்திரம் சொல்லியிருக்கிறார் அல்லது ‘ஆரோன்’ என்று சொல்லியிருக்கிறார். ஆனால் முக்கியமான பல இடங்களில் **சகோதரனாகிய ஆரோன்** என்று சொல்லி இருப்பதை கவனியுங்கள். அதாவது சகோதரன் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாக ஆரோன் திகழ்ந்திருக்கிறார்.

அம்ராமின் பிள்ளைகளில் மூத்தவள் மிரியாம், இரண்டாவது ஆரோன், மூன்றாவது மோசே. ஆரோனுக்கும், மோசேக்கும் மூன்றே வயது மாத்திரம் வித்தியாசம்.

ஆரோனைக் குறித்து தேவன் அறிமுகம் செய்து வைக்கும் வேதபகுதியை கவனித்துப்பாருங்கள். ‘அவன் உன்னை சந்திக்க புறப்பட்டு வருகிறான். உன்னை காணும் பொழுது அவன் இருதயம் மகிழும்.’ (யாத்.4:14)

எண்பது வயதுக்கு மேற்பட்ட இந்த ஆரோன் எண்பது வயதான மோசேயை தேடிக் கொண்டு வருகிறான். எவ்வளவு பெரிய பாசம் பாருங்கள். மீதியானியர் தேசத்திலிருந்து மோசே திரும்புவது இவருக்கு எப்படி தெரியும்? எந்த அடிப்படையில் அவரைக் காண புறப்பட்டு போயிருப்பார்? என்று பல கேள்விகள் என்னுள் அலையலையாய் எழும்புகிறது. இரண்டு பதில்கள் மாத்திரம் என்னை திருப்தி படுத்துகிறது. தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்பார்களே அந்த இரத்த பாசத்தின் தாக்கத்தின் செயல் இஃது. தன் சகோதரனை என்று காணப்போகிறேன் என்று ஏங்கும் தெய்வ பக்தியுள்ள மனிதனுக்கு தேவன் தந்த வெளிப்படுத்தல் இஃது.

என் நினைவுகள் எண்பது ஆண்டிற்கு பிறகு திரும்புகிறது. மூன்று மாத குழந்தையான மோசேயை அலங்கரிக்கிறார்கள். அவனை நாணல் பெட்டியில் வைக்கிறார்கள். பெற்றோர் கண் கலங்க மூத்தவளும் விபரம் தெரிந்தவளுமாகிய மிரியாம் அஃதினை நைல்நதியில் விட எடுத்துச் செல்கிறாள். மூன்றே வயது நிரம்பின ஆரோன் இந்த காட்சிகளை பார்த்தபோது புரியாத வயதிலேயே எப்படி புழுவாய் துடித்திருப்பார். யோசித்துப் பாருங்கள்.

தம்பி அரண்மனைக்கு பிரித்து கொண்டு போகப்பட்டான். அடுத்தோ அவன் மீதியானியர் தேசத்துக்கு ஓடிப்போய் விட்டான். தன் தம்பியைக் குறித்து ஏறக்குறைய எண்பது ஆண்டுகள் ஏக்கமுடையவராய் ஆரோன் இருந்தார்.



கர்த்தருடைய பரிசுத்தன் என்ற சாட்சி எப்படி வந்தது? தன் சகோதரனை பெயரளவில் அல்ல, உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஆரோன் நேசித்தான். திரும்ப இந்த மோசேயை கண்ட ஆரோன் தன்னை மரணம் பிரிக்கும் வரை மோசேயை எல்லா சூழ்நிலையிலேயும் நேசித்து அவனோடு இசைந்திருந்ததுதான் இந்த சாட்சிக்கு காரணம்.

தேவன் சொல்வதை கவனித்துப் பாருங்கள், ‘உன்னைக் காணும்போது அவன் உள்ளம் மகிழும்.’ என் அன்பு வாசகரே! உன் உடன்பிறப்பினிடத்தில் உங்கள் உறவு எப்படியிருக்கிறது? அவர்கள் மேலுள்ள உங்கள் அன்பு எப்படிப்பட்டது? யோசித்துப் பாருங்கள். ஒருதாய் வயிற்றில் பிறந்தவர்களையே நேசிக்க முடியாதவர்கள் எப்படி ஊராரை நேசிக்க முடியும் – தேசத்தை நேசிக்க முடியும்.

சொந்த சகோதரர்களை நேசிக்க முடியாதவர்களிடம் கிறிஸ்துவின் அன்பு நிச்சயம் இருக்க முடியாது. உங்கள் உடன் பிறப்புகள் ஆவிக்குரிய அனுபவம் இல்லாதவர்களாக இருக்கலாம். அவர்களை மாம்சத்தின்படி நீங்கள் நேசித்தே ஆக வேண்டும். அவர்களுள் ஆவிக்குரிய வாழ்வில் எவரேனும் இருப்பார்களாகில் அவர்களை ஆவியின் படியேயும், மாம்சத்தின் படியும் இரண்டு மடங்கு நீங்கள் நேசிக்க வேண்டும்.

ஆரோனின் இதயம் அவன் சகோதரனை கண்ட பொழுது மகிழ்ந்தது. உங்கள் குடும்ப கூடுகையின் பொழுது உங்கள் சகோதரனை காணும் பொழுது உங்கள் உள்ளம் மகிழ்கிறதா? அப்படி மகிழ்ச்சி உண்டானால் நீங்களும் கர்த்தருடைய பரிசுத்தன்.

பல ஆண்டுகளுக்கு முன்பாக எங்கள் பட்டணத்திற்கு ஒருவர் செய்தி கொடுக்க வந்திருந்தார். விசேஷித்த கிருபை பெற்றவர். ஜெபத்தில் கண்ணை மூடினவுடனே, 'ஓ இப்பொழுது நான் அமெரிக்காவில் வாஷிங்டன்னில் இருக்கிறேன். அங்கே அழிந்து போகிற வாலிபர்களை பார்க்கிறேன்' என்று புரியாத, புதிதான அனுபவங்களையெல்லாம் சொல்லுவார். அவர் வந்துபோன நாட்களில் வாலிபர்களில் பலர் ஜெபத்தில் கண்ணை மூடினால், 'ஓ பம்பாயில் நரிமண் பாய்ண்ட்டில் இருக்கிறேன்' 'ஓ நான் டில்லியில் லால்பார்க்கில் இருக்கிறேன்' என்பார்கள். இப்பொழுது அவர்களெல்லாம் எங்கே இருக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியாது.

சரி விஷயத்திற்கு வருவோம். அந்த V.I.P ஊழியர் ஞாயிறு காலையில் செய்தியளிக்க சபைக்கு வந்தார். அவரிடம், 'அய்யா எனது அடுத்த புத்தகத்தை அச்சடிக்க விரும்புகிறேன். உங்கள் சகோதரன் அச்சகத்தில் அடிப்பதற்கு விரும்புகிறேன். கொஞ்சம் சிபாரிசு செய்யுங்களேன் என்றேன். அவர் சிரித்துக்கொண்டே சிபாரிசு எல்லாம் வேண்டாம் என் பேரைச் சொன்னாலே போதும் மிக சகாயமாக அச்சடித்து தருவார் என்றார்.'

நான் அதை நம்பி அடுத்த நாள் அவரின் சகோதருடைய அச்சகத்திற்கு சென்று விஷயத்தை சொன்னேன். அவர் ஒருமுறை முறைத்தார். அவனை எப்படித் தெரியும் என்று சீறினார். சிபாரிசெல்லாம் தேவையில்லை உங்களுக்காக அச்சிட்டு தருவேன் என்றார்.



பின்னர்தான் எனக்கு தெரியும். இரண்டு பேருமே பேசிக்கொள்வதில்லை என்று.

பாருங்கள்! இருவரும் கர்த்தரின் ஊழியத்தை செய்கிறார்கள். ஆனால் இருவரும் பேசிக் கொள்ளமாட்டார்கள். இதைவிடக் கொடுமை என்னவென்றால் அண்ணன் மரித்து விட்டார். தம்பி, சாகும்வரை பேசாமல் இருந்து சரித்திரம் படைத்து விட்டார். இவர்களை எப்படி 'பரிசுத்தர்' என்று சொல்ல முடியும். யோசித்துப் பாருங்கள்.

ஆரோனுக்குள் தான் எத்தனை திவ்ய சுபாவங்கள் தன்னைவிட மூன்று வயது சிறியவன் தனக்கு தேவனாக இருப்பானென ஆண்டவர் சொன்னபொழுது அதை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு சாகும் வரை மோசேயுக்கு அடங்கியிருந்தது எவ்வளவு பெரிய அனுபவம் பாருங்கள்.

இந்த இளையவனான மோசேதான் இவருக்கு அபிஷேகம் செய்து வைக்கிறார். ஒவ்வொரு முறையும் கடிந்து கொள்ளுகிறார். இவைகளெல்லாவற்றிலும் இளையவனான மோசேயுக்கு இணங்கிபோனதை எண்ணிப் பாருங்கள்.

உங்களைவிட இளையவர் கர்த்தரின் ஊழியத்திற்கு வந்திருக்கலாம். 'அவன் கிடக்கிறான் சின்னப் பையன்' என்று அலட்சியப்படுத்தக்கூடாது. அவரை தேவன் எப்படி அங்கீகரித்துள்ளாரோ அதே அங்கீகாரத்தை நீங்களும் வழங்க வேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் நல்ல சகோதரன்.

என்னைப் புல்லரிக்க செய்கிற மற்றுமொரு அனுபவத்தை குறிப்பிட விரும்புகிறேன். அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம் மும்முரமாக நடக்கிறது. யோசுவா களத்தில் இறங்கியிருக்கிறார். மோசே மலையின் உச்சியின் மேல் நின்று கோலை உயர்த்திப் பிடித்து இருக்கிறார். மோசேயின் கைகள் சோர்ந்து தாழ்ந்த போது இஸ்ரவேலர்கள் பின்வாங்கினார்கள். இதனைக் கண்ட ஆரோன் ஒரு கல்லின்மேல் மோசேயை உட்கார வைத்து மோசேயின் கை தாழயிறங்காதபடி தாங்கிப் பிடித்துக்கொண்டார்.

இந்தக் காட்சியை கற்பனை செய்து பாருங்கள். கல்லின்மேல் அமர்ந்திருக்கிற மோசேயின் கையை தாங்கிப் பிடிக்க வேண்டுமானால் கண்டிப்பாக கட்டாந்தரையில் ஆரோன் முழங்காலில் நின்றே ஆகவேண்டும். ஆம்! தன் சகோதரனின் வெற்றிக்காக முழங்காலில் நின்று தாங்குபவனே நல்ல சகோதரன்.

நீங்கள் எப்படி? சற்று யோசித்துப் பாருங்கள். அநேக ஊழியர்கள் தங்கள் அண்ணன், அக்காளின் நிமித்தமே சபையில் சிக்கல்களை அனுபவித்து வருகிறார்கள். நீங்கள் ஆரோனைப் போல இருப்பீர்களென்றால் உங்கள் சகோதரரின் ஊழியம் வெற்றியும் மகிமையுமுள்ள ஊழியமாய் இருக்கும்.

ஆரோன் நன்றாய் பேசுகிறவர். இது அவனைக் குறித்து கர்த்தர் கொடுத்த சாட்சி. 'நான் திக்குவாயும் மந்த நாவுமுடையவன். இது மோசே தனக்குத்தானே கொடுத்துக்கொண்ட சாட்சி. இப்படி மோசே முக்கியமான காரியத்தில் ஆரோனைச் சார்ந்தே இருந்தார். இந்தக்



காரியத்தில் ஆரோனின் அடக்க சுபாவத்தை பாருங்கள். தன்னை சார்ந்திருக்கிற சகோதரனை எந்தக் கட்டத்திலும் ஆதிக்கம் செலுத்தவில்லை.

ஊழியம் செய்கிற உங்கள் சகோதரர் ஏதோவொரு காரியத்தில் உங்களை சார்ந்திருக்கலாம். அதற்காக அவர்மேல் நீங்கள் ஆதிக்கத்தை செலுத்தக் கூடாது. அவருடைய குறையை சொல்லிக் காட்டவோ, குத்திக்காட்டவோ கூடாது.

அவரோடு இசைந்திருக்கிறவரைதான் உங்களுக்கும் உங்களோடுள்ளவைகளுக்கும் மதிப்பும், மரியாதையும் உண்டு என்பதை மறந்துவிடாதீர்கள். ஆரோனைப் போல அளிக்கப்பட்ட கிருபையில் அடக்கமாய் இருங்கள் – நல்ல சகோதரனாய் விளங்குங்கள்.

வழியில் ஆரோனும், மிரியாமும் சற்று இடறலடைகிறார்கள். மோசேக்கு விரோதமாக பேசுகிறார்கள். அங்கே தேவன் இறங்கி வருகிறார். தேவனின் கோபத்தால் மிரியாம் குஷ்டரோகியாகிறாள்.

இந்த தண்டனையிலிருந்து ஆரோன் தப்பித்துக்கொண்டார். அதற்கு பல காரணங்கள் உண்டு. இந்தப் பிரச்சனையில் முதல் காரணியாகிய மிரியாமிற்கு தேவன் தண்டனை கொடுத்தார் என்பதுதான் சரியானதாக இருக்கும். (எண். 12 : 10)

மேலே கவனியுங்கள். ஆரோன் என்ன செய்தார் தெரியுமா? எண்ணாகமம் 12 : 11 ஐ கவனித்துப் பாருங்கள். அப்பொழுது ஆரோன் மோசேயை நோக்கி, 'ஆ, என் ஆண்டவனே, நாங்கள் புத்தியீனமாய்ச் செய்த, இந்தப் பாவத்தை எங்கள் மேல் சுமத்தாதிரும்'

தன் தமக்கையின் சுகத்திற்காக தன் தம்பியை 'ஆண்டவனே' என்று அழைத்து தன்னை தாழ்த்தின ஆரோனை எண்ணிப் பாருங்கள். தன் பிள்ளைகளுக்காக கூடவேண்டாத இவன் தன் சகோதரியின் பாவ மன்னிப்பிற்காக கெஞ்சுவதை யோசித்துப் பாருங்கள்.

தன் உடன் பிறப்புகளின் பாவ மன்னிப்பிற்காக தன்னைத் தாழ்த்தி கதறுபவனே நல்ல சகோதரன்.

எனவே பிரியமானவர்களே ! உங்கள் சகோதரன் மேல் உங்களுக்கு பாசமிருக்க வேண்டும். அவர்களை காண்கிற பொழுது மகிழ்கிற நேசமிருக்க வேண்டும். இளையவர்களானாலும் கர்த்தரின் நிமித்தம் கனம் பண்ண வேண்டும். உங்களைச் சார்ந்து வாழ்கிறவர்களாய் இருந்தாலும் அவர்கள் மேல் உங்கள் ஆதிக்கத்தை செலுத்தக் கூடாது. அவர்கள் சோர்ந்து போய் கைகள் தளர்கையில் முழங்கால்களில் நின்று அவர் வெற்றிக்கு உதவிட வேண்டும். உடன் பிறப்புகளின் பாவ மன்னிப்பிற்காக உங்களை உரிய விதத்தில் தாழ்த்தி அவர்களுக்கு மறுவாழ்வு மலரச் செய்ய வேண்டும். இப்படி செய்வதினால் நீங்கள் ஆரோனைப் போன்ற சிறந்த சகோதரனாய் இருப்பது மாத்திரமல்ல கர்த்தரால் பரிசுத்தன் என்று அழைக்கப்படுவது நிச்சயம்.



# 5

# அழைக்கப்பட்டவனாகிய ஆரோன்

ஆரோனைப் போல அழைக்கப்பட்டால் ஒழிய ஒருவனும் தானாய் இந்த கனமான ஊழியத்திற்கு ஏற்படுவதில்லை என்று எபிரெயரில் எழுதப்பட்டுள்ளது. தானாய் ஏற்படுகிற எந்தவொன்றும் வீணாய்ப் போகும் என்பது வேதம் நமக்குத் தருகிற வெளிச்சம்.

தங்களைத் தாங்களே இராஜாவாக்கிக் கொண்டவர்கள், நியாயாதிபதிகள் ஆக்கிக் கொண்டவர்கள், தீர்க்கதரிசியாக்கிக் கொண்டவர்கள் பின்னாளில் மனிதராலும் கர்த்தராலும் தள்ளப்பட்டு இருக்கும் இடம் கூட தெரியாமல் உருக்குலைந்து போனார்கள் என்பதற்கு திருமறையில் போதிய ஆதாரமிருக்கிறது.

ஆரோன் செய்த ஆசாரிய ஊழியத்தைப் பார்க்கிலும் புதிய ஏற்பாட்டின் ஊழியம் மிகவும் கனமுள்ளது – நித்தியத்திற்குரியது. அழைக்கப் படாதவர்கள் இந்த ஊழியத்திற்கு தானாய் எழும்புவது நல்லதல்ல. ஆரோனைப் போல அழைக்கப்பட்டாலொழிய இந்த கனமான ஊழியத்திற்கு தானாய் எவரும் வந்து விடக்கூடாது.

தேவையே அழைப்பு (need is call) என்பதெல்லாம் உண்மைதான். ஆத்தும ஆதாயப் பணிக்கு தேவையே அழைப்பு என்பது பொருந்தும். ஆனால் மகிமையுள்ள ஆசாரியத்துவத்திற்கு ஒப்பான ஊழியத்தில் அழைப்பில்லாமல் செய்யக் கூடாது.

**ஆரோன் அழைக்கப்பட்டாரா?**

இதுவொரு நல்ல கேள்வி. தேவன் 'வா' என்று ஆரோனை அழைத்தாரா? என்று நீங்கள் கேட்கலாம்.

இஸ்ரவேல் புத்திரருக்கு வழிநடத்தும் தலைவர்கள் தேவைப்பட்ட பொழுது தேவன் முட்செடியில் தரிசனமாகி மோசேயை அழைத்தார். அதே நேரத்தில் தேவன் ஆரோன் உள்ளத்தில்பேசி மோசேயிருக்கும் இடத்திற்கு அழைத்து வருகிறார். இது அழைப்பின் இன்னொரு விதம்.

இது தன்னுடைய திட்டத்தின்படி தான் நடக்கிறது என்கிறதை மோசே புரிந்து கொள்ளும்படியாக, 'அவர் உன்னைக் காண புறப்பட்டு வருகிறான். உன்னை சந்திக்கும் பொழுது அவன் உள்ளம் மகிழுமென்று' அவர் அழைப்பை உறுதிப்படுத்துகிறார்.

ஆரோனை அழைப்பது மாத்திரமல்ல ஊழியத்தில் அவர் நிலை என்ன? பொறுப்பு என்ன? என்பதை ஆவியானவர் மோசேக்கு வெளிப்படுத்துகிறார்.

1. உள் மனதில் பேசி ஆயத்தப்பட செய்தல்.
2. மற்றவர்களிடம் இந்த அழைப்பிற்கு தேவனே சாட்சி கொடுத்தல்.
3. ஊழியத்தின் நிலைப்பாட்டை தேவனே உறுதிப்படுத்துதல்.



இதுதான் ஆரோனைப் போல அழைக்கப்படுதல் என்பதற்கு சரியான விளக்கம்.

பிரியமானவர்களே! கர்த்தர் உங்களை ஊழியத்திற்கு அழைத்தால் உங்கள் உள்மனதில் திட்டமும், தெளிவும் இருக்க வேண்டும். உங்கள் அழைப்பை குறித்து உங்களை நடத்தப்போகிற தலைவர்களுக்கு திட்டமாய் தேவன் வெளிப்படுத்த வேண்டும்.

ஊழியங்களில் வித்தியாசம் உண்டு. ஆனால் கர்த்தர் ஒருவரே என்று 1 கொரிந்தியர் 12 ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். எனவே உங்கள் ஊழியத்தை குறித்த திட்டமும் தெளிவுமான வரைபடத்தை தேவன் உங்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

சமீபத்தில் ஒரு தம்பதியினர் என்னிடத்தில் ஜெபித்துக் கொள்ளும்படி வந்தனர். தங்களை கர்த்தர் ஊழியத்திற்கு அழைத்திருப்பதாகவும் எனவே நான் அவர்களுக்கு ஜெபித்து ஆசீர் கூற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

நான் அவர்களை உட்கார வைத்து பேசினேன், 'ஊழியத்திற்கு வந்து என்ன செய்யப்போகிறீர்கள்?' என்று கேட்டேன். அந்த அம்மா, 'சபை நடத்தப் போகிறோம்.' என்றார். நல்லது அந்த அழைப்பை எப்படி உணர்ந்தீர்கள் என்று கேட்டேன், 'அந்த அம்மா நான் சொப்பனம் கண்டேன். அதில் என்கணவர் பிரசங்கிப்பதை போல பார்த்தேன். எனவே சபை ஊழியம் என்று புரிந்து கொண்டேன். அது மட்டுமல்ல போன வாரம் நம்ம ஊரில் நடந்த சுவிசேஷ கூட்டத்தில் பிரசங்கியார் 'மகளே.......... என்று என் பெயரைச் சொல்லி உன்னை ஊழியத்திற்கென அழைத்திருக் கிறேன் என்றார்' என்று என்னிடம் கூறினார்.

எனக்கு சிரிப்பதா? அழுவதா? என்று தெரியவில்லை. ஏம்மா இத்தனை கேள்விகளுக்கும் உங்கள் கணவர் ஒரு பதில் கூட சொல்லவில்லை. எல்லாவற்றிற்கும் நீங்களே பதில் சொல்லுகிறீர்களே அது ஏன்? ஒரு கனவு கூட உங்கள் கணவருக்கு வராமல் உங்களுக்கு வருவது ஏன்? பிரசங்கியார் உன் கணவரின் பெயரைச் சொல்லாமல் உங்கள் பெயரைச் சொன்னாரே அது ஏன்? அழைப்பு உங்களுக்கா, உங்கள் கணவருக்கா? நீங்கள் நடத்த போகும் சபைக்கு தலைவர் நீங்களா உங்கள் கணவரா? என்று அடுக்கடுக்காய் கேள்விகளை கேட்டேன்.

அந்த அம்மையார் சற்று நேரம் அமைதியாயிருந் தார். சற்று நேரத்திற்கு பிறகு வாயை திறந்தார். நீங்கள் ஆலோசனை சொல்வீர்கள் என்று தான் உங்களிடம் வந்தோம். நான் முகதாட்சண்யம் இல்லாமல் தெளிவாய் சொன்னேன். சபை நடத்தும் அழைப்பு உங்களுக்கு இல்லை. சில சாதக சூழ்நிலையினிமித்தம் உங்களுக்கு ஏற்பட்ட உற்சாக மிகுதியின் உச்ச கட்டத்தின் நிலை இஃது என்றேன். என் மீது கோபத்தோடு போய் விட்டார்கள்.

இப்படி அழைப்பைக் குறித்த தெளிவு இல்லாமல் சபைகளை ஆரம்பிப்பதினால் தான் ஊழியங்கள் சந்தி சிரிக்கும்படி நடக்கிறது.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு ஒருவர் சபை துவங்கப் போவதாக அழைத்து கொண்டு வந்தார். நான் அவரை உட்கார வைத்து பேசினேன். 'உங்களுக்காக நான் ஜெபித்து வருகிறேன். உங்களுக்கு மேய்ப்பருக்கு



உரிய அழைப்பு இல்லை. நீங்கள் ஒரு நல்ல சுவிசேஷகர், அதை மாத்திரம் செய்யுங்கள். இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டாத வேலை' என்றேன்.

'பாஸ்டர் நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. ஆனால் எங்கு போனாலும் உங்கள் சபை எங்கு இருக்கிறது என்று பலர் கேட்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் சபை ஆரம்பிக்கிறேன்' என்றார். 'மக்கள் கேட்கிறார்கள் என்பதற்காக சபை ஆரம்பிக்கிறீர்களே உனக்கு ஏன் இந்த வேலையென்று கர்த்தர் கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள்' என்றேன். அவர் ஒரு பதிலும் சொல்லாமல் போய்விட்டார்.

ஆனாலும் நான் விட்டபாடில்லை அந்த அழைப்பில் அச்சிடப்பட்டுள்ள சிறப்பு விருந்தினருக்கு போன் செய்தேன். 'நீங்கள் மூத்த ஊழியரல்லவா? அவர்தான் ஆர்வக் கோளாரினால் இப்படி செய்கிறார் என்றால் நீங்களாவது புத்தி சொல்லி இருக்கலாமே? நீங்கள் மௌனமாய் இருப்பது நியாயமா என்றேன்'.

அந்த வி.ஐ.பி. என் நண்பர், அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'போயா பொறாமைக்காரா அவர் ஊழியத்தில் வளர்வது உமக்கு பிடிக்கவில்லை. எங்கள் பெயரெல்லாம் அழைப்பிதழில் இருப்பதைக் கண்டு உமக்கு எரிச்சல்' இப்படி வரிசையாக வசைமாறி பொழிந்தார். நான் என்ன செய்தேன் தெரியுமா? 'நண்பரே மன்னித்துக் கொள்ளுங்கள் இந்த ஊழியம் ஆறு மாதத்திற்கு மேல் நடந்தால் என்னிடத்தில் கர்த்தரின் ஆவியில்லை என்பது உண்மையாகும். ஆறு மாதத்திற்குள் அவ்வூழியம் நின்று போனால் ஒரு பெரிய

தவறுக்கு நீரும் ஒரு காரணம்' என்று போனை வைத்து விட்டேன். நடந்தது என்ன தெரியுமா? சில மாதங்களிலேயே அச்சபை ஊழியம் நிறுத்தப்பட்டாயிற்று.

**அழைக்கப்பட்டவனுக்கு ஆண்டவரின் அங்கீகாரம்:**

தேவன் ஒரு மனிதனை ஒரு குறிப்பிட்ட ஊழியத்திற்கு அழைப்பாரானால் அதற்கான அவரின் அங்கீகாரத்தை பலர் அறிய வெளிப்படுத்துவார். ஆரோனுடைய ஊழியத்தில் தேவன் இதை செய்து காண்பித்தார். இஸ்ரவேல் புத்திரர் ஆரோனுக்கு எதிராக புரட்சி செய்த பொழுது மோசே தேவனுடைய திட்டத்தின் படி ஒரு காரியத்தை சொன்னார். ஒவ்வொரு கோத்திரத்துக்கு உண்டான ஒவ்வொரு பிரபுவின் பெயரிலும் கோல்கள் சேகரிக்கப்பட்டது. லேவி கோத்திரத்தின் கோலின் மேல் ஆரோனின் பெயர் எழுதப்பட்டிருந்தது.

இப்படி சேகரிக்கப்பட்ட பன்னிரெண்டு கோல்களும் கர்த்தரின் சந்நிதியில் வைக்கப்பட்டது. என்ன ஆச்சர்யம்! அடுத்த நாள் பார்த்தால் ஆரோனின் கோல் துளிர்விட்டு பூப்பூத்து வாதுமைப் பழங்களை கொடுத்தது.

ஆம் இதுதான் அழைக்கப்பட்டவனுக்கு தேவன் கொடுக்கிற அங்கீகாரத்தின் அத்தாட்சி. அவன் ஊழியம் துளிர்விடும் பூப்பூக்கும். கனிகளை கொடுக்கும். அவனுக்குள்ளும், அவன் ஊழியத்திற்குள்ளும் புதிய ஜீவன் இருக்கும். பொங்கி எழுபவர்களின் வாய்களை அடைக்கத் தக்கதாக புதிய வளர்ச்சியையும் செழுமையையும் தேவன் கட்டளையிடுவார்.



**அழைக்கப்பட்டவன் அற்புதங்கள் செய்வான் :**

ஆசாரியனாகிய ஆரோன் அற்புதங்களை செய்தாரென்பது குறிப்பிட வேண்டிய விஷயம் தனது ஊழியத்தின் ஆரம்பத்திலிருந்து ஆரோன் அற்புதங்களை செய்தார். பார்வோன் அரண்மனையில் ஆரோன் தான் தன் கோலை கீழே போட்டான். அது பாம்பாக மாறியது. இங்கே ஒன்றை கவனியுங்கள். எகிப்து மந்திரவாதிகளும் தங்களின் கோல்களைப் போட்டார்கள். அவைகள் பாம்புகளாக மாறின. ஆனால் பாம்பாக மாறின ஆரோனின் கோல் அவைகளை விழுங்கிப் போட்டது. அதாவது ஒரே நிமிடத்தில் எகிப்தின் மந்திரவாதிகள் கோலை இழந்தவர்களாய் ஆரோனுக்கு முன்பாக நின்றார்கள். இதுதான் அழைக்கப்பட்டவர்களுக்கு தேவன் அளிக்கிற அற்புதத்தின் அங்கீகாரம்.

தனது நாற்பது வருட ஊழியத்தில் மோசேயோடு இணைந்து ஆரோன் அற்புதங்களை செய்தார். ஒரு ஆசாரியன் தன் ஊழிய நிலையை பலிபீடத்தை சுற்றி அமைத்துக் கொள்ளாமல் கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படியாகவும், கர்த்தருடைய ஜனம் பயன்படும்படியாகவும், தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தியது எவ்வளவு பெரிய சிலாக்கியம் எண்ணிப் பாருங்கள்.

புதிய ஏற்பாட்டு சபைக்கு இப்பேர்பட்ட அங்கீகாரத்தை தேவன் தந்திருப்பது எவ்வளவு பெரிய கிருபை. 1 கொரிந்தியர் 12 ஆம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். மேலும் மாற்கு 16 : 17ஐ வாசித்துப் பாருங்கள்.

அற்புதங்களை செய்வதற்கும், இயற்கைக்கு மேலான கிரியைகளை நடப்பிப்பதற்கும் அடையாளங்களையும், வரங்களையும் தேவன் நமக்கு தந்துள்ளார்.

அப்போஸ்தலர்கள் தங்களின் ஆவிக்குரிய பயணத்தின் துவக்கத்தின் பொழுதே அடையாளங் களையும், அற்புதங்களையும் செய்து தங்களின் அழைப்பு இன்னதென்று உலகறிய செய்தனர்.

பிரியமானவர்களே! நீங்கள் இராஜரீக ஆசாரியர்கள் ஆராதிப்பது மாத்திரம் உங்கள் சிலாக்கியமல்ல. ஆண்டவரின் நாமத்தில் அற்புதங்கள் செய்யவும் நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

நீங்கள் அழைப்பில் இருந்தாலும் அற்புதங்களை செய்ய முடியும். அப்போஸ்தலர் நடபடிகள் 6, 7 ஐ வாசித்துப் பாருங்கள். ஆதி சபையில் அப்போஸ்தலர்கள் மாத்திரமல்ல. உதவிக்காரர்கள் கூட அற்புதம் செய்தார்கள்.

ஆரோன் ஆசாரியனாயிருந்தும் தாம் அழைக்கப் பட்ட அழைப்பிலே நின்று அற்புதங்களை செய்தார். ஆண்டவரின் நாமத்தை மகிமைப்படுத்தினார். தேவன் அவரை கனப்படுத்தும்படி ''பரிசுத்தன்'' என்று அழைத்தார். உங்கள் தாலந்துகளை இரட்டிப்பாக்கினால் நீங்களும் கர்த்தருடைய பரிசுத்தனென்று அழைக்கப் படுவீர்கள்.



# 6

# பெலவீனனாகிய ஆரோன்

இதுவரை ஆரோனின் திவ்ய சுபாவங்களை நாம் கவனித்தோம். அவர் நல்ல பரிசுத்தர், அழைக்கப்பட்டவர், நல்ல சகோதரர், நல்ல ஆசாரியர், தேவனிடத்தில் சாட்சி பெற்றவர். தேவ வார்த்தையின்படியே தன் ஓட்டத்தை முடித்தவர்.

எலியா நம்மைப் போல பாடுள்ள மனிதனாக இருந்ததைப் போலவே ஆரோனும் நம்மைப்போல பெலவீனம் உடையவராகத் தான் இருந்தார். மூன்று முக்கியமான சமயங்களில் அவருக்கு தோல்வி ஏற்படத்தான் செய்தது. இரண்டு முறை தண்டனைக்கு தப்பித்துக் கொண்ட இவர், மூன்றாம் முறை தப்பிக்க வழியில்லாமல் சிக்கிக் கொண்டதுதான் வேதனை.

இந்த மூன்று நிகழ்வுகளிலிருந்து முக்கியமான எச்சரிக்கைகள் நமக்கு கிட்டுகின்றன. நாம் ஆவிக்குரிய பாதையில் வளர வளர ஊழியப் பாதையில் வேகமாக செல்ல செல்ல இப்படிப்பட்ட கண்ணிகளும், கயிறுகளும் வேகமாய் நம்மை நெருங்கி வருகிறதை கருத்தாய் கவனிக்க வேண்டும். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலைகளில் ஞானமாகவும், மௌனமாகவும் நடந்து கொள்ள தேவ பெலனை கூடுதலாக காத்திருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

மோசே தேவ சமுகத்தில் காத்திருக்கும்படி மலைமேல் சென்றவர் நீண்ட நாட்களாக திரும்பி வரவில்லை. பாளையத்திற்குள் இருந்த ஜனங்களே ஜலப்பிரலயம் போல் எழும்பி விட்டார்கள். (யாத். 32ம் அதிகாரம்) 'மோசேக்கு என்ன ஆயிற்றோ எங்களுக்கு தெரியாது. எங்களுக்கு முன் செல்லும் படியாக தெய்வங்களை நீர் உண்டுபண்ணும்' என்று கூக்குரலிட்டார்கள்.

அழைக்கப்பட்ட அற்புதங்கள் செய்யும் ஆற்றல் பெற்ற ஆண்டவரின் செயல்கள் குறித்த அறிவு பெற்ற விடுதலை ஊழியத்தில் மோசேயோடு இருந்து அனுபவம் பெற்ற இந்த ஆரோன் வெகு திறமையாக சமாளித்திருக்க வேண்டும் – சரிபடுத்தியிருக்க வேண்டும்.

ஆனால் நடந்தது என்ன? மோசே மலையிலிருந்து இறங்கி வருவதற்குள் விக்கிரகம், விழா, விளையாட்டு, விருந்து என்று ஏகப்பட்ட குழப்படி, முடிவு தேவனுடைய விக்கினம் ஜனங்கள் மேல் வந்தது. இத்தனைக்கும் யார் காரணம் தெரியுமா? ஜனங்களோடு ஒத்துப்போன ஆரோன்தான். நீங்கள் யாத்திராகமம் 32ஐ வாசித்துப் பார்த்தால் இந்த நிகழ்வில் ஆரோன் கொண்ட சரிவின் 12 படிகளை உங்களால் கண்டு கொள்ள முடியும்.

1. மோசேக்கு விரோதமாக மக்கள் பேசினதற்கு **செவிகொடுத்தான்** (வசனம் 1)
2. அவர்கள் பொல்லாத ஜனங்கள் என்று கண்டு அஞ்சி **அடங்கிப் போனான்.** (வசனம் 1, 22)



3. விக்கிரக கடவுளை செய்ய அவர்களிடம் **ஒப்புக் கொண்டான்.** (வசனம் 2, 4)
4. தானே முன் வந்து தங்க ஆபரணங்களை **கேட்டான்.** (வசனம் 5)
5. ஆராதிக்க பொன் கன்று குட்டியை **செய்தான்.** (வசனம் 5)
6. அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தை **உண்டு பண்ணினான்.** (வசனம் 5)
7. பண்டிகையை **அறிவித்தான்** (வசனம் 5)
8. அஃதினை கர்த்தரின் பண்டிகையென்று **திசைதிருப்பினான்.** (வசனம் 6)
9. விருந்துண்ணவும், விளையாடவும் **அனுமதித்தான்.** (வசனம் 6)
10. கன்றுகுட்டியை வார்ப்பித்த இவன் அக்கினியிலிருந்து வந்ததாக மோசேயிடம் **பொய் சொன்னான்.** (வசனம் 24)
11. பகைவருக்குள்ளே ஜனங்களை **அவமானப்பட வைத்தான்.** (வசனம் 25)
12. ஜனங்களை **நிர்வாணமாக்கினான்.** (வசனம் 25)

பார்த்தீர்களா எவ்வளவு வேகத்தில் எத்தனை பாதாளத்தில் ஆரோன் சறுக்கி விழுந்திருக்கிறார்.

இது ஆவிக்குரியவர்களுக்கு மிகப்பெரிய எச்சரிக்கை சரியான விதத்தில் மக்களை நடத்துவதற்கு – மக்களிடம் நடந்து கொள்வதற்கு தலைவர்களுக்கு விளக்கமான செய்தி இதுவே.

ஆரோன் சொல்வது போல் மக்கள் பொல்லா தவர்கள் தான். அவர்களை நல்வழி படுத்தத்தான் தலைவர்களே தவிர அவர்கள் சொல்வழி நடப்பதற்கல்ல. வேதம் என்ன சொல்கிறது? பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்படிதான் சபையையும் தலைவர்களையும் தேவன் ஏற்படுத்தியுள்ளார். சீர்படுத்த வேண்டியவர்களே சீர்கெட்டுப்போனால் சபை என்ன ஆவது? யோசித்துப் பாருங்கள்.

திருவசனத்தைக் கொண்டு திட்டமாகவும், தெளிவாகவும் போதித்து அவர்களை உணர்வடையச் செய்ய வேண்டும் – உற்சாகம் அடையச் செய்ய வேண்டும். அதைவிட்டு விட்டு அவர்கள் போடுகிற சட்டத்திற்கும், திட்டத்திற்கும் இசைவு தெரிவித்து தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள் போல் நேரத்திற்கு ஒரு வேஷம், ஆளுக்கொரு கோஷம் போடக்கூடாது.

ஆரோன் மக்கள் பேசினதற்கு செவி கொடுத்தார். மோசேயிக்கு ஏதாவது ஒன்று ஆகிவிட்டால் நம்முடைய எதிர்காலம் என்ன ஆவது? என்று யோசித்திருப்பார் என்று நினைக்கிறேன். வாழ நினைத்தால் வாழலாம் எப்படியும் வாழலாம் பூமியில் என்று புதிய நினைவு வந்திருக்குமென்று யோசிக்கிறேன். ஒரே நிமிடத்தில் ஆரோன் மாறிவிட்டார்.

தங்க நகைகளை கேட்டார். கன்று குட்டியை வார்த்தார். இது கடவுளென்று அறிவித்தார். மக்களின் ஏகோபித்த தலைவனாய் மாறிவிட்டார். கர்த்தரையும் மறந்துவிடவில்லை. கர்த்தருக்கு பண்டிகையென்று அறிவித்து விட்டார். ஆஹா! சூப்பர் ஆரோன்! பிழைக்கத்



தெரிந்த ஆரோன் மக்களையும் மகிழ்ச்சியாக்கிவிட்டார். கர்த்தரின் பண்டிகையையும் அறிவித்து விட்டார். (இது யாரை மகிழ்விக்க என்று எனக்குத் தெரியாது.)

இப்படியெல்லாம் எழுதுவதற்கு வருத்தப்படுகிறேன். ஆனால் இஃதினை எழுதாவிட்டால் கர்த்தருக்கு முன்பாக நான் குற்றவாளியாக இருப்பேனென்றும் அறிவேன். எனவே எழுத வேண்டியதை துணிவோடு எழுதுகிறேன்.

பல தலைவர்களை பார்க்கும் பொழுது எனக்கு பரிதாபம் வருகிறது. பரிசுத்தவான்களாகிய இவர்கள் பரிகாசத்திற்கு உரியவர்களாய் நடந்து கொள்கிறார்களே அது ஏனென்று புரியவில்லை.

ஊழியத்திற்கு வரும்பொழுது சகலத்தையும் தூக்கியெறிந்துவிட்டு சாகவும் தயார் என்று வருகிற இவர்கள் சில ஆண்டுகளில் பத்து தலைமுறைக்கு சொத்து சேர்ப்பதும், வாழ்க்கை வசதியாக வாழ்வதற்காக வாய்ப்புகளைத் தேடி வாயைத் திறந்து கொண்டு அலைவதும், சத்தியத்தை வளைத்து கொடுத்து அவலட்சணமான ஆதாயத்திற்காக அடி பணிவதும் ஏனென்று எனக்கு புரியவில்லை.

ஆரோன்களே! ஆரோன்களே! கோபப்படாதீர்கள். மக்களை பிரியப்படுத்தினால் நீங்கள் கர்த்தரின் ஊழியரல்ல மக்களுக்கு பயந்தால் மனுஷருக்கு பயந்தால் அது உங்களுக்கு கண்ணியை வருவிக்கும் கவனமாயிருங்கள். சத்தியத்திற்காக வாழ்ந்து நீங்கள் சாக நேர்ந்தால், சந்தோஷத்தோடே பரலோகம் உங்களை கைநீட்டி வரவேற்கும்.

எப்படியோ ஊழியத்திற்கு வந்துவிட்டோம். இனி வாழ்ந்தேயாக வேண்டும். எவன் கெட்டால் என்ன? யார் செத்தாலென்ன? நான் வாழ்ந்தால் போதுமென்றெண்ணி மக்கள் வெள்ளம் போகிற போக்கில் நீங்களும் போவீர்களென்றால் உங்களுக்குள் ஜீவன் கிடையாது. நீங்கள்ஒருசெத்தமீன்.தேவனால் தூக்கியெறியப் படுவீர்கள். கவனமாயிருங்கள்.

பிரியமானவர்களே! கிறிஸ்தவ வாழ்வென்பது விசேஷமானது. சத்தியத்திற்காக வாழ வேண்டும் அல்லது சத்தியத்திற்காக வீழ வேண்டும். இப்படி வாழ்வதை விட்டுவிட்டு என் அப்பாவிற்காக இப்படி செய்கிறேன், என் சம்பந்திக்காக இப்படி செய்கிறேன் என்று சந்தர்ப்ப வாதமாக சத்தியத்தை விடுவதோ – விற்பதோ கூடாது. ஒரு காரியத்தில் கொஞ்சம் விட்டுக்கொடுக்க ஆரம்பித்தால் கொஞ்சம் கொஞ்சமாக முழுமைக்கும் அடிமையாகி விடுவீர்கள் கவனமாக இருங்கள்.

லோத்து இப்படித்தான் எடுத்தவுடன் சோதோமுக்குள் கூடாரம் போடவில்லை. எதிரேதான் கூடாரம் போட்டான். ஆனால் கொஞ்சநாளில் அவன் எங்கே இருந்தான் தெரியுமா? சோதோமின் ஒளிமுகவாசலில் கூடாரம் போட்டிருந்தான். அதாவது உள்ளூர் வி.ஐ.பி. ஆகிவிட்டான். விழுகை என்பது வித்தியாசமானது. அழுகையுடன் மனந்திரும்பினால் எழுகை தானாக வந்துவிடும். ஆனால் பின்மாற்றம் என்று ஒன்று இருக்கிறதே அதிலிருந்து தப்பித்து வருவதென்பது கூடாத காரியம்.



ஒரு கிறிஸ்தவ விரிவுரையாளர் தன் மாணவர் களுக்கு ஒரு வேடிக்கையான ஒரு ஆய்வு செய்து காட்டினார். ஒரு பாத்திரத்திலுள்ள கொதிக்கும் நீரில் உயிருள்ள ஒரு தவளையை போட்டார். அது ஒரே குதியாய் வெளியே விழுந்து ஓடியது. அதே தவளையை ஒரு பாத்திரத்திலுள்ள குளிர்ந்த நீரில் போட்டு பாத்திரத்தை அடுப்பில் வைத்தார். இளஞ்சூடு அதற்கு இன்பமாக இருந்தது. வெளியே வர மனதில்லை. கடைசியில் என்ன நடந்தது? தண்ணீர் சூடான பொழுது அதனால் வெளியே வர முடியாமல் வெந்து மடிந்தது. பின்மாற்றம் இப்படித்தான் வெளியே வர மனமும் வராது வாய்ப்பும் தராது.

ஆரோன் இப்படித்தான் கொஞ்சமாக கால் வைத்து முழுமையாக சறுக்கல் அடைந்தார். தேவ கிருபையினால் தப்பித்து விட்டார் என்பது வேறு விஷயம். நீங்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டுமென்பதே முக்கியமான விஷயம்.

விசுவாச சகோதரர்களுக்கு இன்னும் சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். இவர் இப்படி செய்கிறாரே; அவர் அப்படி செய்கிறாரே என்று சொல்லி திருமறைக்கு எதிராக சில சோரம்போன ஆரோன்கள் செய்யும் காரியங்களை கண்டு கொள்ளாதீர்கள் – கற்றுக் கொள்ளாதீர்கள். நடந்தது என்ன? கன்றுக்குட்டியை செய்தவனும் கடவுள் இது என்று சொன்னவனுமாகிய ஆரோன் தப்பித்துக் கொண்டான். அஃதினை நம்பினவர்களும், அதன் முன் நடனமாடினவர்களும் மடிந்து போனார்கள். இதை இன்னும் விளக்கத் தேவையில்லை என நம்புகிறேன்.

ஆரோன் தோற்றுப் போன இன்னொரு சூழலை கவனியுங்கள். எண்ணாகமம் 12 அதிகாரம் 1 முதல் 7 வசனங்கள் வரை இந்த சம்பவம் சொல்லப்பட்டுள்ளது. மிரியாமும், ஆரோனும் தனி கூட்டணி ஒன்றை அமைக்கிறார்கள். மோசேவிற்கு விரோதமாக போர்க்கொடி உயர்த்துகிறார்கள், 'எத்தியோப்பிய ஸ்திரீயை மோசே விவாகம் பண்ணினதாக குற்றப்படுத்துகிறார்கள். இரண்டாவதாக மோசேயை கொண்டு மாத்திரம் தான் கர்த்தர் பேசினாரா எங்களைக் கொண்டு பேசவில்லையா?' என்று குற்றம் சாட்டினார்கள். நடந்தது. என்ன தெரியுமா? தேவன் உடனே இறங்கி வந்து நியாயத்தீர்ப்பு செய்தார். மிரியாம் குஷ்டரோகியானாள். இதிலேயும் ஆரோன் தப்பித்துக் கொண்டார்.

எத்தியோப்பிய ஸ்திரீ என்பதைக் குறித்து பலவிதமான கருத்துக்கள் நிலவுகிறது. சிப்போராளின் மரணத்துக்குப் பிறகு மோசே மணம் முடித்துக் கொண்ட இரண்டாம் மனைவி என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் வேதத்தில் அதற்கு போதுமான ஆதாரம் இல்லை.

மோசேயின் மனைவியாகிய சிப்போராள் மீதியான் தேசத்து ஸ்திரீ. அந்தப் பகுதியில்தான் எத்தியோப்பியா இருக்கிறது. ஆபிரகாமின் மற்றொரு மனைவியாகிய கேத்துராளின் வம்சா வழியினர் தான் இந்த மீதியானியர். மோசே ஒரு வழியில் ஆபிரகாமின் சந்ததியில் தான் மணம் முடித்தார் என்று சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுவதை நான் நம்புகிறேன்.



Moses married a midianite, a daughter of he priest of Middian, The Land of cush as well as Ethiopia because one branch of cush settled there in ancient times. Midian was a son of Abraham through kethurah. Therefore Moses married a descendant of the son of Abraham, and not a member of the negro race, as some think she was simply cushite because of dwelling in the land of cush, in the same sense that a German or an Italian is an American because of citizenship and dwelling in American. Just as being an American does not identify one as to color and race. So being a cushite did not identify Zipporah as to these matters. Some say that she was a second wife of Moses, but we have no grounds for this supposition. (ஆதாரம் Dake's Bible Page No. 169)

பிரச்சனை திருமணத்தை பற்றியல்ல தங்கள் தலைமைத்துவத்தையும், தங்கள் தீர்க்கதரிசன ஊழியத்தின் நிலைப்பாட்டையும் குறித்ததுவே. நீங்கள் எண்ணாகமம் 10 ஆம் அதிகாரத்தை வாசித்துப் பார்த்தால் சில புதிய வரவுகளை உங்களால் காண முடியும். முன்னே மோசேயின் மாமனாகிய எத்திரோ மோசேயை பார்க்க வந்தார். அவர் சொன்ன சில நடைமுறைக் காரியமாற்றங்களை இஸ்ரவேலின் சபையில் மோசே கொண்டு வந்தார். இப்பொழுதோ எத்திரோவின் மகனான ஒபா மோசேயை சந்திக்க வந்துள்ளார். (எண்ணாகமம் 10 : 29–33)

மோசே என்ன சொன்னார் தெரியுமா? நீ எங்களோடேயே தங்கியிரும் நாங்கள் போகும் வழியை எல்லாம் நீ அறிந்திருக்கிறபடியால் எங்களுக்கு

கண்களைப் போலிருப்பாய் என்ற வார்த்தை ஆரோன், மிரியாமிற்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அதை நேரடியாக வெளிப்படுத்த முடியவில்லை. எனவே சுற்றி வளைத்து பிரச்சனையை கிளப்பினார்கள்.

இப்படித்தான் சிலர் ஊழியர்களானாலும், விசுவாசிகளானாலும் புதிய வரவுகளை – புதிய உறவுகளை விரும்புவதில்லை. தன்னுடைய தலைமைத் துவத்தின் நிலையிலிருந்து தள்ளப்பட்டு விடுவோமோ என்ற அச்சம் கொள்கின்றனர். ஆரோனும், மிரியாமும் அப்படிப்பட்ட அச்சத்தால் மோசேயை தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர உள்ளொன்று வைத்துக் கொண்டு புறம்பாக வேறொரு காரியத்தை முக்கியப்படுத்தி குற்றப்படுத்தினார்கள். This was not the real cause; only the excuse. Not wanting to expose themselves as being jealous of their younger brother and his success, they tried to hide the real cause thus. Miriam, one of Israel's Prophetesses, enjoyed the position of first rank among the women of Israel (Ex. 15 : 20) being the sister of the two cheif men of the nation, she caused the rebellion, without a doubt., because she thought she was being supplanted by a foreigner, Jethro had brought the wife and sons of Moses from Midian to sinai in order toreunite the family. furthermore, he had given advice which Moses followed in making heads over 10's, 50's, 100's and 1000's in Israel (Ex. 18 : 14-26). Moses had invited his father-in-law and brother-in-law to go along with them to be leaders in showing them the best places to camp. It displeased



Miriam to see these new comers given such attention; and her resentment was shared by Aaron. Himself the ecclesiastical head of Israel. The two of them challenged the right of Moses to serve as the leader of the whole nation; but Miriam seems to have been the chief instigator of this ungodliness because punishment fell on her alone. Aaron was simply misled by the pleading of his sister; and he yielded to her as he did once before to the desires of the people who urged him to sin. Thus, again his weakness of character showed up, a trait that would have disqualified him for taking and place of Moses his younger brother. (ஆதாரம் : Dake's Bible Page No.: 158) தேவன் சும்மா விடுவாரா? நியாயம் செய்ய இறங்கி வந்துவிட்டார்.

பிரியமான தெய்வ பிள்ளையே! உங்களுக்கு பாதிப்பு வருவதினாலோ அல்லது வரும் என்று நீங்கள் அஞ்சுவதாலோ உங்கள் தலைவர்களை குற்றப் படுத்தாதீர்கள். அவர்கள் தேவனின் சொத்து. அவர்களின் குறைவுகளை அறிந்து தான் தேவன் அழைத்திருக்கிறார் – ஊழியம் செய்ய அனுமதித்திருக்கிறார் – ஊழியத்தினிமித்தம் ஆசீர்வதித்துமிருக்கிறார்.

உங்களைப் பொறுத்தவரை கவனமாக இருக்க வேண்டியதுதான் உங்கள் கடமை. அதே நேரத்தில் நீங்களும் ஆண்டவரால் அழைக்கப்பட்டவர்கள்தான். எந்தப் புதிய வரவும் – புதிய உறவும் உங்கள் நிலையிலிருந்து உங்களை பின்னிட்டுத் தள்ள முடியாது. உங்கள் ஆஸ்தியையும், ஆரோக்கியத்தையும் சிலரால்

சேதப்படுத்த முடியுமே தவிர உங்கள்அழைப்பையும், அபிஷேகத்தையும் ஒருவராலும் கெடுக்க முடியாது. இந்த தெளிவு உங்களுக்கு இருக்குமானால் எந்த நிலையிலும், எவரையும் குற்றப்படுத்த மாட்டீர்கள்.

கர்த்தர் இறங்கி வந்தார் ! பொரிந்து தள்ளினார்.

1. அவன் சாந்த குணமுள்ளவன்.
2. அவன் உண்மையுள்ளவன்.
3. அவன் தீர்க்கதரிசிகளுள் மேலானவன்.
4. அவனோடு முகமுகமாய் பேசுகிறேன்.
5. அவன் கர்த்தரின் சாயலை காண்கிறவன்.

என்று புகழாரம் சூட்டியதோடு அவனுக்கு விரோதமாக பேச உங்களுக்கு பயமில்லாமற் போனதென்ன? என்று கடிந்து கொண்டு கோபமாக போய்விட்டார்.

பிரியமானவர்களே ! கர்த்தர் தெரிந்து கொண்ட ஊழியருக்கு விரோதமாக அபாண்டமாய் நீங்கள் குற்றப்படுத்தும் போது தேவ பயம் உங்களுக்குள் இல்லை என்பதை வெளிப்படுத்துகிறீர்கள். முடிவு, தேவ கோபத்திற்கும் சாபத்திற்கும் ஆளாவீர்கள் எச்சரிக்கை.

இங்கேயும் ஆரோன் தப்பித்துக் கொண்டார். அதற்கு காரணம் கூட்டணியாக இருவரும் இருந்தாலும் மிரியாம்தான் வாய்திறந்து பேசினாள். (மூலமொழியில் பெண் பாலில் எழுதப்பட்டுள்ளது). எனவே தான் அவளுக்கு தண்டனை. மட்டுமல்ல, பிரதான ஆசாரியனே குஷ்டத்தால் தீட்டுப்பட்டால் நிலை என்ன ஆவது? அந்த ஊழியத்தினிமித்தம் ஆரோனுக்கு மன்னிப்பு. மன்னிப்பு எல்லாவேளையிலுமே கிடைக்காது கவனமாயிருங்கள்.

ஆரோனின் மூன்றாவது தோல்வியைப் பாருங்கள். எண்ணாகமம் 20ல் இது பதிவு செய்யப்பட்டுள்ளது. கன்மலையைப் பார்த்து பேசுங்கள் என்று கர்த்தர்



சொன்னார். ஆரோனும், மேசேயுமோ மக்களைப் பார்த்து பேசினார்கள், கன்மலையை அடித்தார்கள். எப்படியோ தண்ணீர் வந்தது மக்களுக்கு தாகம் தீர்ந்தது. ஆனால் அதே வேளையில் தேவனுக்கு கோபம் மூண்டது. தேவன் இறங்கி வந்தார், 'பின்பு கர்த்தர் மோசேயையும், ஆரோனையும் நோக்கி இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னை பரிசுத்தம் பண்ணும்படி விசுவாசியாமற் போனபடியால் நீங்கள் கானானுக்குள் பிரவேசிப்பதில்லையென்று தேவன் தீர்ப்பு அளித்தார்.' (எண். 20 : 12)

பிரியமானவர்களே ! நமது விசுவாச வாழ்வில் சர்வ கவனத்துடன் நாம் நடந்து கொள்ள வேண்டும். ஜனங்கள் கொடுக்கிற அழுத்தத்தினால் ஆரோன் விக்கிரகத்தை செய்தான். சகோதரி கொடுத்த அழுத்தத்தில் மோசேக்கு விரோதமாக பேசினான். ஆனால் இந்த இரண்டு முறையும் அவன் மனம் வருந்தி, கெஞ்சினதால் தேவ இரக்கம் பெற்றான்.

இப்படியே நாம் செய்யும் தப்பிற்கெல்லாம் தேவ இரக்கம் கிடைத்து விடுமென்று தப்புக் கணக்கு போட்டு விடாதீர்கள். கோணல் வழியில் செல்வதையே வாடிக்கையாக்கி விடாதீர்கள். அப்படிச் சென்றால் கர்த்தர் என்ன சொல்கிறார் என்பதை நிதானிக்க கூட இடமில்லாமல் இருதயத்தில் இறுமாப்பு குடிகொண்டு விடும் கவனமாயிருங்கள்.

ஐயகோ ! என் சொல்வேன், அழைக்கப்பட்ட ஆரோன், சகோதரனாகிய ஆரோன், ஆசாரியனாகிய ஆரோன், அபிஷேகம் பண்ணப்பட்ட ஆரோன். என்றெல்லாம் புகழப்பட்ட இந்த பரிசுத்தனாகிய ஆரோன் தன் இளவல் மோசேயோடும் தன் புதல்வன் எலெயாசரோடும், தன் தேவன் சொன்ன வாக்கின்படி ஓர் எனும் மலைக்கு ஏறிப் போகிறார்.

ஒவ்வொரு வஸ்திரமாக கழற்றி கொடுக்க அதை மோசே எலெயாசருக்கு உடுத்துகிறான். கானானைத் தான் பார்க்க முடியவில்லை என்றாலும் தனக்கடுத்த பிரதான ஆசாரியனைக் கண் குளிரப் பார்த்தார். அதன்பின் அங்கே ஜீவித்துப் போனான்.

எனக்குள் ஒரு கேள்வி! மேரிபாவின் தண்ணீரண்டையில் தன்னை பரிசுத்தம் பண்ணும்படி விசுவாசியாமற் போன ஆரோனை **கர்த்தருடைய பரிசுத்தனாகிய ஆரோன்** என்று தேவன் ஏன் அழைத்தார் எப்படி அழைக்க முடிந்தது?

எனக்குள் இரண்டு காரியங்கள் தான் நினைவிற்கு வருகிறது. ஒன்று தன் வாழ்நாள் முழுவதும் தன்னால் இயன்ற வரை தன் தேவனுக்கு முன்பாக ஆரோன் செய்த தியாகங்களையும், பரிசுத்த கிரியைகளையும் தேவன் நினைவு கூர்ந்தார். மட்டுமல்ல தான் வாழும் கடைசி நிமிடத்தில் தனக்கு மரணமென்று தெரிந்த பொழுதும் தேவனுக்கு விரோதமாக முறுமுறுக்காமல் தன்னை தாழ்த்தி, தேவனுடைய சிட்சையை அற்பமாக எண்ணாமல் அதை ஏற்றுக் கொண்டு தேவ சித்தத்தின்படி தேவ சமூகத்தில் தன் வாழ்வை ஆரோன் முடித்துக் கொண்டதினால் அவரின் கலங்கமெல்லாம் கழுவப்பட்டது. **கர்த்தரின் பரிசுத்தனாகிய ஆரோன்** என்று சாட்சி பகிர வைத்தது.

**நம் தூசிகளை உதறிடுவோம்!**
**பரிசுத்தமாய் வாழ்ந்திடுவோம்!**
**பாவ நினைவுகளை அகற்றிடுவோம்!**
**பரிசுத்தரைப் போல் மாறிடுவோம்!**

ஆமென்.

## விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,
**Pr. அலெக்ஸ் தினகரன்**